# பிதாவாகிய ஆபிரகாம்

**பாடம் 2**

## ஆபிரகாமின் வாழ்க்கை: உண்மையான அர்த்தம்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை  வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும்  எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால்  501(c)(3)  கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற  பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து  www.thirdmill.org. யைப்  பார்வையிடவும்.

# பொருளடக்கம்


முன்னுரை ........ 1

இணைப்புகள் ........ 3

**வரையறை** ........ 4

**வகைமைகள்** ........ 5

பின்னணிகள் ........ 5

மாதிரிகள் ........ 7

முன் நிழலிடுதல்கள் ........ 9

**தொகுப்பு** ........ 11

நடைமுறைப்படுத்தல்கள் ........ 13

**அடிப்படைத் தாக்கம்** ........ 14

**முக்கிய கருப்பொருள்கள்** ........ 15

தெய்வீக கிருபை ........ 15

ஆபிரகாமுடைய தேவப்பற்று ........ 16

ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் ........ 17

ஆபிரகாமின் மூலம் ஆசீர்வாதங்கள் ........ 18

**ஐந்து படிகள்** ........ 19

பின்னணி மற்றும் முன் அனுபவங்கள் ........ 19

மற்றவர்களுடனான முன் தொடர்பு ........ 21

தேவனுடனான உடன்படிக்கை ........ 22

மற்றவர்களுடனான பிற்கால தொடர்புகள் ........ 24

சந்ததி மற்றும் மரணம் ........ 27

முடிவுரை ........ 30




வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

கிறிஸ்துவின் உண்மையான சீஷர்கள் வேதவசனங்களை நேசிக்கிறார்கள். அவைகள் நம் வாழ்வில் பலவிதமான மற்றும் தனிப்பட்ட வழிகளில் பேசுவதை நாம் பார்க்கிறோம். கிறிஸ்தவர்கள் ஒருபோதும் மறக்கக் கூடாத வேதத்தைப் பற்றிய ஒரு விலைமதிப்புள்ள உண்மை இதுவாகும். ஆனால் பல முறை வேதத்தின் இந்த அருமையான தனிப்பட்ட பரிமாணம் நாம் எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டிய ஒன்றின் பார்வையை இழக்கச் செய்ய நேரிடலாம். வேதம் உங்களுக்கோ எனக்கோ நேரடியாக எழுதப்படவில்லை. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பிற மக்களுக்கு வேதம் முதலில் எழுதப்பட்டது. ஆகவே, இன்று நம் வாழ்வில் வேதவாக்கியங்கள் எவ்வாறு பொருந்துகின்றன என்பதைப் புரிந்துகொள்ள முயற்சிக்கும்போது, நம்முடைய நவீன பயன்பாடுகளை வேதத்தின் சரியான அர்த்தத்தில் அடிப்படையாகக் கொள்ள நாம் எப்போதும் கவனமாக இருக்க வேண்டும்.

இது *பிதாவாகிய ஆபிரகாம்* என்ற தலைப்பில் நமக்கு இருக்கிற பாடங்களின் தொடர் ஆகும். இந்த பாடங்களில் ஆதியாகமம் 11:10–25:18 இல் காணப்படும் ஆபிரகாமுடைய வாழ்க்கையின் விவரங்களை ஆராய்கிறோம்.

மூன்று அறிமுக பாடங்களில் இது இரண்டாவதாகும், மேலும் இந்த பாடத்திற்கான தலைப்பு "ஆபிரகாமின் வாழ்க்கை: உண்மையான அர்த்தம்." ஆபிரகாமுடைய வாழ்க்கையின் கதைகள் அவை எப்போது எழுதப்பட்டன, யாருக்கு எழுதப்பட்டன என்பதன் வெளிச்சத்தில் படிப்பது எவ்வளவு முக்கியம் என்பதை இந்த பாடத்தில் பார்ப்போம். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி மோசேயைப் பின்தொடர்ந்தபோது, இந்த கதைகள் இஸ்ரவேல் தேசத்தின் மீது ஏற்படுத்திய உண்மையான தாக்கத்தைப் பற்றி ஆராய்ந்து பார்ப்போம்.

இரண்டு முக்கிய பிரச்சனைகளைப் பார்ப்பதன் மூலம் ஆதியாகமம் 11:10–25:18 இன் உண்மையான அர்த்தத்தை ஆராய்ந்து பார்ப்போம். முதலாவதாக, ஆபிரகாமுடைய வாழ்க்கையின் வரலாறு மற்றும் அவரது முதல் பார்வையாளர்களின் அனுபவங்களுக்கு இடையில் மோசே எவ்வாறு தொடர்புகளை ஏற்படுத்தினார் என்பதை நாம் சுட்டிக்காட்டுவோம். இரண்டாவதாக, முதல் பார்வையாளர்களுக்கு இந்த இணைப்புகள் ஏற்படுத்திய சில தாக்கங்களை சுருக்கமாகக் கூறுவோம்.

ஆபிரகாமுடைய வாழ்க்கையின் உண்மையான அர்த்தத்தைப் பார்ப்பதற்கு முன், முந்தைய பாடத்தில் நாம் கண்டதை மறுபரிசீலனை செய்ய சிறிது நேரம் ஒதுக்க வேண்டும். இது வரை, நாம் இரண்டு முக்கியமான



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பிரச்சனைகளில் கவனம் செலுத்தியுள்ளோம். முதலில், ஆபிரகாமின் கதையில் ஆதியாகமம் 12:1–3 நான்கு முக்கிய கருப்பொருள்களை வெளிப்படுத்துகிறது என்று நாம் பரிந்துரைத்தோம். ஆபிரகாமுக்கு தேவன் காட்டிய இரக்கம் (தேவன் முற்பிதாவுக்கு இரக்கம் காட்டிய பல வழிகள்), தேவனுக்கு விசுவாசமாக இருக்க வேண்டியதற்காக ஆபிரகாமின் பொறுப்பு (ஆபிரகாம் அவருக்குக் கீழ்ப்படிவான் என்று தேவன் எதிர்பார்த்த பல வழிகள்), ஆபிரகாமுக்கு தேவனின் ஆசீர்வாதம் (ஒரு பெரிய தேசம் என்கிற வாக்குத்தத்தங்கள், பல பிள்ளைகள், ஒரு நிலம், மற்றும் ஒரு பெரிய பெயர்) மற்றும் ஆபிரகாம் மூலமாக மற்றவர்களுக்கு தேவனுடைய ஆசீர்வாதம் (ஆபிரகாம் பூமியின் அனைத்து குடும்பங்களுக்கும் ஒரு ஆசீர்வாதமாக இருப்பான் என்ற வாக்குத்தத்தம்).

இதற்கு அப்பால், இந்த முக்கிய கருப்பொருள்கள் ஆபிரகாமின் கதை ஆதியாகமத்தில் சொல்லப்பட்ட விதத்தை வடிவமைத்ததையும் நாம் பார்த்தோம். ஆபிரகாமின் கதை ஐந்து சமச்சீர் படிகளாகப் பிரிவதை நாம் கற்றுக்கொண்டோம். முதலில், ஆபிரகாமின் பின்னணி மற்றும் அவரின் ஆரம்ப அனுபவங்களுடன் 11:10–12:9 இல் தொடங்குவோம். இரண்டாவதாக, பல அத்தியாயங்கள் 12:10–14:24 இல் ஆபிரகாம் பிற மக்களின் பிரதிநிதிகளுடன் கொண்ட முந்தைய தொடர்புகளில் கவனம் செலுத்துகின்றன. ஆபிரகாமுடைய வாழ்க்கையின் மூன்றாவது மற்றும் மையப் பிரிவு 15:1–17:27 இல் தேவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையை மையமாகக் கொண்டுள்ளது. ஆபிரகாமுடைய வாழ்க்கையின் நான்காவது பகுதி 18:1–21:34 இல் ஆபிரகாம் பிற மக்களின் பிரதிநிதிகளுடன் கொண்ட தொடர்புகளுக்கு மாறுகிறது. ஐந்தாவது பிரிவு ஆபிரகாமின் சந்ததியையும் அவனுடைய மரணத்தையும் 22:1–25:18 இல் பேசுகிறது.

இந்த ஐந்து படிகள் முற்பிதாவின் வாழ்க்கையை சமச்சீர் வடிவத்தில் விளக்குகின்றன. ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கையை கையாளும் 15:1–17:27 இன் மூன்றாவது பிரிவு, ஆபிரகாமுடைய வாழ்க்கையின் மையப் பகுதியாக செயல்படுகிறது. இரண்டாவது மற்றும் நான்காவது பிரிவுகள் ஒன்றுக்கொன்று ஒத்திருக்கின்றன, ஏனெனில் அவை இரண்டும் மற்ற மக்களுடன் ஆபிரகாம் கொண்டிருந்த தொடர்புகளில் கவனம் செலுத்துகின்றன. முதல் மற்றும் கடைசி பிரிவுகள் ஆபிரகாமுடைய வாழ்கையின் விவரங்களை வழங்குவதன் மூலம் ஒன்றுக்கொன்று ஒத்துப்போகின்றன, கடந்த காலத்திற்க்கும் எதிர்காலத்திற்கும் இடையில் அவரது குடும்ப தலைமுறையை இணைக்கின்றன.

பல விஷயங்களில், ஆபிரகாமுடைய வாழ்க்கையின் அமைப்பு மற்றும் உள்ளடக்கம் குறித்த இந்த நுண்ணறிவுகளை இந்த பாடம் கட்டமைக்கும். இந்த மதிப்பாய்வை மனதில் கொண்டு, இந்தப் பாடத்தின் முக்கிய காரியங்களுக்கும் ஆதியாகமம் புத்தகத்தில் ஆபிரகாமுடைய வாழ்க்கையின் உண்மையான அர்த்தத்தைக் காணவும் நாம் தயாராக உள்ளோம். ஆபிரகாமைப் பற்றிய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கதைகளுக்கும் இந்தக் கதைகளை முதலில் பெற்ற இஸ்ரவேலின் அனுபவங்களுக்கும் இடையிலான தொடர்புகளை ஆராய்வதன் மூலம் துவங்கலாம்.

# இணைப்புகள்

இந்த தொடர் பாடங்களில், ஆபிரகாமுடைய வாழ்க்கையைப் பற்றிய எங்கள் விளக்கத்தை இந்த கதைகள் முதலில் மோசேயின் நாட்களில் எழுதப்பட்டவை என்ற கருத்தின் அடிப்படையில் உருவாக்கி வருகிறோம், மேலும் அவை அப்போது இருந்ததைப் போலவே இப்போதும் இருக்கின்றன. இந்தக் கதைகள் மோசேயின் நாட்களில் எழுதப்படவில்லை என்று பெரும்பாலான விமர்சக அறிஞர்கள் நம்புகிறார்கள், ஆனால் பழைய ஏற்பாட்டின் மற்ற பகுதிகளும் இயேசுவும் மோசே ஆதியாகமத்தை எழுதினார் என்று வலியுறுத்தியது உணமையாகும், மேலும் இதன் காரணமாக நவீன கிறிஸ்தவர்கள் இந்த புத்தகத்தின் எழுத்தாளர் மோசே தான் என்பதை உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் இந்த தொடரில் ஒரு படி மேலே செல்ல வேண்டும் என்கிற அக்கறை நமக்கு உள்ளது. மோசே இந்தக் கதைகளை எழுதினார் என்ற உண்மையை மட்டுமல்ல; அவர் ஏன் அவற்றை எழுதினார் என்பதையும் அறிய விரும்புகிறோம். ஆபிரகாமின் வாழ்க்கையைப் பற்றிய அவரது பார்வை என்னவாக இருந்தது? இதை எழுதியதில் அவரது நோக்கம் என்னவாக இருந்தது? மோசே ஆபிரகாமைப் பற்றிய கதைகளை எகிப்திலிருந்து வெளியேறி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி அவரைப் பின்தொடர்ந்த இஸ்ரவேலர்களான தனது முதல் பார்வையாளர்களின் அனுபவங்களுடன் இணைப்பதற்கான வழிகளைத் தேடுவதே ஆபிரகாமுடைய வாழ்க்கையின் உண்மையான அர்த்தத்தை ஆராயத் தொடங்குவதற்கான சிறந்த வழிகளில் ஒன்றாகும்.

ஆபிரகாமைப் பற்றிய கதைகளை மோசே தனது முதல் பார்வையாளர்களுடன் எவ்வாறு இணைத்தார் என்பதை ஆராய, நாம் மூன்று விஷயங்களைத் தொடுவோம்: முதலில், இந்த இணைப்புகளைப் பற்றி பேசும்போது அவைகளின் அர்த்தம் என்ன என்பதை ஆராய்வோம். இரண்டாவதாக, ஆபிரகாமுடைய வாழ்க்கையின் கதைகளில் தோன்றும் சில வகையான இணைப்புகளைப் பார்ப்போம்; மூன்றாவதாக, ஆபிரகாமின் வாழ்க்கைக் கதையின் கட்டமைப்பில் உள்ள ஐந்து முக்கிய படிகளில் ஒவ்வொன்றையும் பார்த்து இந்த கதைகளில் உள்ள இணைப்புகளை சுருக்கமாகக் கூறுவோம். இணைப்புகளைப் பற்றி பேசும்போது நாம் என்ன அர்த்தம் கொள்கிறோம் என்பதிலிருந்து துவங்கலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# வரையறை

பல வழிகளில், ஆபிரகாமுடைய வாழ்க்கையின் வரலாற்றை மோசே இயற்றியபோது, வேதத்தின் கதைகளை எழுதுபவர்கள் அனைவரும் தங்களைக் கண்ட ஒரு சூழ்நிலையில் அவர் தன்னைக் கண்டார். அவர் இரண்டு உலகங்களுக்கு இடையில் நின்றார். ஒருபுறம், ஆபிரகாமின் உலகம் என்று நாம் அழைக்கும் “அந்த உலகம்”: பற்றி மோசேக்கு தகவல்கள் கிடைத்தன. பாரம்பரியம் மற்றும் தேவனின் அசாதாரண வெளிப்பாடு மூலம் 500 முதல் 600 ஆண்டுகளுக்கு முன்னர் ஆபிரகாமின் வாழ்க்கையில் என்ன நடந்தது என்பது பற்றி அவர் அறிந்திருந்தார். இந்த அர்த்தத்தில், முதன்முதலில் மோசே ஆபிரகாமுடைய வாழ்க்கையின் பண்டைய உலகத்தைக் குறித்து அறிந்தார்.

ஆனால் மறுபுறம், மோசே தான் வாழ்ந்த உலகத்தையும், “அவர்களின் உலகம்”: என்று நாம் அழைக்கக்கூடிய மோசேயின் உலகத்தையும் மற்றும் அவரைப் பின்பற்றிய இஸ்ரவேலர்கள் பற்றியும் பேசினார். அந்த நேரத்தில் தேவனுடைய ஜனங்களின் தலைவராக, அவர்களின் உலகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மோசே ஆபிரகாமுடைய வாழ்க்கையின் பண்டைய உலகத்தைப் பற்றி தனது கதைகளை எழுதினார்.

ஆபிரகாமின் வாழ்க்கையின் “அந்த உலகம்” மற்றும் “அவர்களின் உலகம்” (அவரது சமகால உலகம்) ஆகியவற்றுக்கு இடையே மோசே மத்தியஸ்தம் செய்தபோது, அவர் முற்பிதாவின் வாழ்க்கைக்கும் அவரது வாசகர்களின் வாழ்க்கைக்கும் இடையில் தொடர்புகளை ஏற்படுத்தினார், இதனால் அவர் எழுதிய கதைகளின் பொருத்தத்தை அவர்கள் காண முடிந்தது. அதாவது, அவரைப் பின்தொடர்ந்த இஸ்ரவேலர்கள் ஆபிரகாமின் வாழ்க்கை அவர்களின் வாழ்க்கையுடன் தொடர்புகளைக் கொண்டிருப்பதைக் காண முடிந்த வழிகளில் மோசே தனது கதைகளைத் தேர்ந்தெடுத்து வடிவமைத்தார். ஆபிரகாமுக்கும் அவர்களுடைய சமகால அனுபவங்களுக்கும் இடையிலான ஒப்பீடுகளையும் முரண்பாடுகளையும் தனது பார்வையாளர்கள் அறிந்துகொள்ளும் நோக்கத்தில் மோசே இதை எழுதினார். சில நேரங்களில் இந்த ஒப்பீடுகளும் முரண்பாடுகளும் மிகக் குறைவானவை, மற்ற நேரங்களில் அவை மிகவும் விரிவானவை, ஆனால் ஒவ்வொரு அத்தியாயத்திலும் மோசே எப்படியாவது ஆபிரகாமின் வாழ்க்கைக்கும் அவரது முதல் பார்வையாளர்களின் வாழ்க்கைக்கும் இடையிலான இந்த வகையான தொடர்புகள் குறித்து எழுதினார்.

இணைப்புகள் மற்றும் உண்மையான அர்த்தத்தின் அடிப்படை யோசனையை இப்போது நாம் பார்த்திருக்கிறோம், ஆபிரகாமின் வாழ்க்கைக்கும் அவருடைய முதல் இஸ்ரவேல் பார்வையாளர்களின் அனுபவங்களுக்கும் இடையில் மோசே ஏற்படுத்திய இணைப்புகளின் வகைகள் பற்றிய நம்முடைய இரண்டாவது காரியத்துக்கு வருவோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# வகைமைகள்

எந்தவொரு கதையும் அதன் வாசகர்களுக்குப் பொருத்தமாக இருக்க, அதன் வாசகர்கள் புரிந்துகொள்ளக்கூடிய ஒரு உலகத்தை அது சித்தரிக்க வேண்டும். ஒரு கதையின் உலகம் நிஜ உலகத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருந்தால், கதையின் கதாபாத்திரங்கள் மற்றும் கருப்பொருள்களுடன் வாசகர்களால் தொடர்புபடுத்த முடியாவிட்டால், கதையால் ஒரு காரியத்தையும் தொடர்புபடுத்த முடியாது. அல்லது இந்த பாடத்தின் அடிப்படையில், ஆபிரகாமின் “அந்த உலகம்” மோசே மற்றும் இஸ்ரவேலரின் “அவர்களுடைய உலகத்திலிருந்து” முற்றிலும் மாறுபட்டதாக இருந்திருந்தால், ஆபிரகாமைப் பற்றிய கதைகள் இஸ்ரவேலருக்கு அர்த்தமுள்ளதாகவோ அல்லது பொருத்தமானதாகவோ இருந்திருக்காது. எனவே, ஆபிரகாமின் உலகத்துக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி நகரும் இஸ்ரவேலரின் உலகத்துக்கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்த மோசே மிகவும் கடினமாக உழைத்தார்.

இந்தப் பாடத்தில் மோசே இந்த தொடர்புகளை எவ்வாறு தெளிவுபடுத்தினார் என்பதுதான் நமக்கு முன் இருக்கிற கேள்வியாகும். ஆபிரகாமைப் பற்றிய அவரது கதைகளை அவர் எவ்வாறு தனது வாசகர்களின் உலகத்துடன் இணைப்பதற்கு வடிமைத்தார்? இந்தத் தொடரை நாம் தொடர்ச்சியாக கற்று முன்னேறும்போது, மோசே தன்னிடம் உள்ள விவரங்களை இஸ்ரவேலரின் அனுபவங்களுடன் மூன்று முக்கிய வழிகளில் இணைத்திருப்பதைக் காண முடியும். முதலாவதாக, அவர் தனது கதைகளை எழுதினார், இதனால் அவர்கள் அனுபவித்த விஷயங்களின் வரலாற்று பின்னணியைப் பற்றி இஸ்ரவேலர்களிடம் அவைகள் கூறின. இரண்டாவதாக, இஸ்ரேலர்கள் பின்பற்ற அல்லது தவிர்க்க மாதிரிகள் அல்லது எடுத்துக்காட்டுகளை அவைகள் வழங்கின என்று அவர் எழுதினார். மூன்றாவதாக, முற்பிதாவின் பல அனுபவங்கள் இஸ்ரவேலரின் அனுபவங்களை முன்னறிவித்தன அல்லது மாற்றியமைத்தன என்பதைக் காட்ட அவர் எழுதினார். எதிர்கால பாடங்களில் இந்த வகையான இணைப்புகளை நாம் பலமுறை குறிப்பிடுவோம் என்பதால், ஆபிரகாமுடைய வாழ்க்கையின் சரியான பொருத்தத்தை மோசே தனது முதல் பார்வையாளர்களுக்குக் காட்ட இந்த மூன்று நுட்பங்களையும் அறிமுகப்படுத்த வேண்டும். மோசேயின் நாளில் இஸ்ரவேலின் அனுபவத்திற்கான பின்னணியை ஆபிரகாமின் வாழ்க்கை எவ்வாறு வழங்கியது என்பதை முதலில் பார்ப்போம்.

## பின்னணிகள்

பல வழிகளில், அனைத்து இணைப்புகளிலும் அடையாளம் காண இதுவே எளிதானதாக உள்ளது. அவர்கள் அனுபவிக்கும் காரியங்களின்

வரலாற்று பின்னணியை விளக்கும் முக்கிய நோக்கத்திற்காக அனைத்து தரப்பு மக்களும் ஒருவருக்கொருவர் கதைகளைச் சொல்வது மிகவும் பொதுவான காரியமாகும். பெற்றோர்கள் பெரும்பாலும் குழந்தைகளிடம் இதைச் செய்கிறார்கள், ஆசிரியர்கள் தங்கள் போதனைகளை இந்த வழியில் விளக்குகிறார்கள், போதகர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் கூட இதைச் செய்கிறார்கள். வரலாற்று பின்னணியை வழங்கும் விதத்தில் கவனத்தை ஈர்ப்பதன் மூலம் கதைகளை நம் பார்வையாளர்களுடன் பெரும்பாலும் இணைக்கிறோம்.

இப்போது ஆபிரகாமின் வாழ்க்கையைப் பொறுத்தவரை, இந்த இணைப்பை நாம் இவ்வாறு விவரிக்க முடியும்: ஆபிரகாமுடைய வாழ்க்கையின் நிகழ்வுகளில் இஸ்ரவேலின் அனுபவங்கள் வரலாற்று ரீதியாக வேரூன்றிய வழிகளை மோசே சுட்டிக்காட்டியபோது வரலாற்று பின்னணிகளின் தொடர்பைக் காணலாம். எடுத்துக்காட்டாக, கானான் தேசத்தை இஸ்ரவேலின் தாயகமாக பார்க்கும் வரலாற்று பின்னணியை மோசே விளக்கிய விதத்தை எடுத்துக் கொள்ளுங்கள். எகிப்திலிருந்து வெளியேறிய போது பல முறை இஸ்ரவேலர்கள் கானான் தேசத்திற்கு ஏன் செல்ல வேண்டும் என்று ஆச்சரியப்பட்டதை நீங்கள் நினைவில் வைத்திருப்பீர்கள். அந்த தேசத்திற்குள் நுழைவதை நிறுத்த மோசே ஏன் அனுமதிக்க மாட்டார்?

பல சந்தர்ப்பங்களில், ஆபிரகாமுடைய வாழ்க்கையின் வரலாற்று பின்னணி குறித்து சில விவரங்களை அளிப்பதன் மூலம் மோசே இந்த பிரச்சினையை பேசினார். இஸ்ரவேலர்கள் தங்களுக்கு கானானில் ஒரு தாயகம் இருக்க வேண்டும் என்று அவர் ஏன் வலியுறுத்தினார் என்பதைக் காணும்படியாக தேவன் ஆபிரகாமுக்கு கானானில் ஒரு தாயகத்தை குறிப்பாகக் கொடுத்தார் என்பதை ஒரு வார்த்தையில் காட்டினார். உதாரணமாக, ஆதியாகமம் 15:18 இல் தேவன் ஆபிரகாமுடன் பேசிய இந்த வார்த்தைகளை கவனிக்கலாம்:

> எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதுமான தேசத்தை நான் உன் சந்ததிக்குக் கொடுப்பேன் (ஆதியாகமம் 15:18).

இஸ்ரவேல் கானானை சுதந்தரிக்க வேண்டும் என்று மோசே வற்புறுத்தியதன் தோற்றம் அல்லது வரலாற்றுப் பின்னணியை இந்த வேத பகுதி நிறுவியது. தேவன் அந்த நிலத்தை இஸ்ரவேலின் பெரிய பிதாவுக்குக் கொடுத்தார், அவர் அதை அவருடைய சந்ததியினருக்குக் கொடுத்தார், எனவே வேறு ஏதேனும் ஒரு தேசத்தில் குடியேற முடியாது.

ஆபிரகாமின் வாழ்க்கையைப் பற்றிய கூடுதல் விவரங்களை ஆராயும்போது, மோசே இந்த வகையான வரலாற்று பின்னணிகளை அடிக்கடி சுட்டிக்காட்டியிருப்பதைக் காண முடியும். அவர்களுக்கு மாதிரிகளை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வழங்கியது மோசே தனது நாளில் ஆபிரகாமின் வாழ்க்கையை இஸ்ரவேலுடன் இணைத்த இரண்டாவது முக்கிய வழியாகும். அவர்களுக்கு மாதிரிகள் வழங்குவதன் மூலம் ஆகும். இந்தக் கதைகளில் மாதிரிகள் எவ்வாறு செயல்பட்டன என்று பார்ப்போம்.

## மாதிரிகள்

ஆபிரகாமின் கதைகளை வெறும் பின்னணி தகவலாக தனது முதல் வாசகர்கள் பெறுவதை மோசே விரும்பவில்லை; அவர் முற்பிதாவின் வாழ்க்கையில் உள்ள பல சூழ்நிலைகளை விவரித்தார், இதனால் ஆபிரகாமின் வாழ்க்கையின் சூழ்நிலைகளுக்கும் அவர்களின் சொந்த சூழ்நிலைகளுக்கும் இடையே கணிசமான எண்ணிக்கையிலான ஒற்றுமைகளை அவர்கள் காண முடிந்தது. இந்த ஒற்றுமைகள் மோசேயின் பார்வையாளர்களுக்கு தார்மீக பிரச்சினைகளை எழுப்பின. இந்த ஒற்றுமைகள் இஸ்ரவேலுக்கு எடுத்துக்காட்டுகளைப் பின்பற்றுவதற்கும் நிராகரிப்பதற்கும் வழிவகுத்தது என்று மோசே சுட்டிக்காட்டினார்.

மாதிரிகள் அல்லது எடுத்துக்காட்டுகளை வழங்குவதற்காக கதைகளைச் சொல்வது நம்மைக் கேட்பவர்களுடன் கதைகளை இணைப்பதற்கான பொதுவான வழியாகும். இது எல்லா நேரத்திலும் நடக்கும். இதையோ அதையோ செய்ய வேண்டாம் என்று வேலையில் இருக்கும் ஒருவரை நாம் எச்சரிக்கும்போது, கடைசியாக ஒருவர் இந்த தவறைச் செய்தபோது என்ன நடந்தது என்பது பற்றிய கதையை நாம் அடிக்கடி சேர்ப்பது வழக்கம். பள்ளியில் படிக்கும்போது ஏன் கடினமாக உழைக்க வேண்டும் என்பதை குழந்தைகளுக்கு நாம் கற்பிக்கிறோம் என்றால், பள்ளியில் கடுமையாக உழைத்ததால் பெரிய வெற்றியைப் பெற்றவர்களின் உதாரணங்களைத் தரும் கதைகளுடன் நாம் பெரும்பாலும் அவர்களை அறிவுறுத்துவது வழக்கம்.

ஆபிரகாமைப் பற்றிய கதைகளை தனது முதல் இஸ்ரவேல் பார்வையாளர்களுடன் இணைக்க மோசே பெரும்பாலும் அவ்வாறே செய்தார். அவர் ஆபிரகாமின் கதையை அவர்களுக்கு முன்வைத்தார், இதனால் அவரது கதாபாத்திரங்கள் பின்பற்றவோ நிராகரிக்கவோ இஸ்ரவேலுக்கு முன்மாதிரியாக இருக்கும். உதாரணமாக, கானான் தேசத்தை ஆக்கிரமித்த கானானியர்களின் அச்சுறுத்தலுக்கு எதிராக தைரியமாக மோசே இஸ்ரவேலரை அறிவுறுத்தியதை கவனியுங்கள். மோசேயைப் பின்தொடர்ந்த இஸ்ரவேலர்கள் கானானுக்குள் நுழைய மறுத்துவிட்டார்கள் என்று எண்ணாகமம் மற்றும் உபாகமம் புத்தகங்களிலிருந்து நாம் அறிவோம், ஏனெனில் பலம்வாய்ந்த கானானியர்கள் தேசத்தை ஆக்கிரமித்திருந்தார்கள். கானானியர்கள் வெல்லமுடியாத எதிரி என்று தோன்றியதால் அவர்களின் இருதயங்கள் அச்சத்தால் நிறைந்திருந்தன. மோசே இஸ்ரவேல் கோத்திரங்களுக்கு சொன்ன இந்த வார்த்தைகளை உபாகமம் 1:26-28 இல் வாசிக்கிறோம்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> ஆனால் நீங்கள் மேலே செல்ல விரும்பவில்லை; உங்கள் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைக்கு எதிராக நீங்கள் கலகம் செய்தீர்கள். உங்கள் கூடாரங்களில் முறுமுறுத்து, ”கர்த்தர் நம்மை வெறுத்து, நம்மை அழிக்கும்பொருட்டாக நம்மை எமோரியரின் கையில் ஒப்புக்கொடுக்கும்படி, நம்மை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார். நாம் எங்கே போகலாம்? அந்த ஜனங்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்களும், நெடியவர்களும், 'அவர்கள் பட்டணங்கள் பெரியவைகளும், வானத்தையளாவும் மதிலுள்ளவைகளுமாய் இருக்கிறதென்று' ” என்று நம்முடைய சகோதரர் சொல்லி, நம்முடைய இருதயத்தைக் கலங்கப்பண்ணினார்கள் என்று சொன்னார்கள் (உபாகமம் 1:26–28).

ஆபிரகாம் தனது நாளில் கானானியர்களை எதிர்கொண்ட உதாரணத்தை தனது வாசகர்களுக்கு வழங்குவது கானானியர்களைப் பற்றிய இந்த பயத்தை மோசே உரையாற்றிய வழிகளில் ஒன்றாகும். உதாரணமாக, ஆபிரகாமின் வாழ்க்கையில் கானானியர்களைப் பற்றிய முதல் குறிப்பை ஆதியாகமம் 12:6 இல் காண்கிறோம்:

> ஆபிராம் அந்தத் தேசத்தில் சுற்றித் திரிந்தார் … அக்காலத்திலே கானானியர் அத்தேசத்தில் இருந்தார்கள் (ஆதியாகமம் 12:6).

ஆதியாகமம் 13:7 இல் நாம் இதை வாசிக்கிறோம்:

> அக்காலத்திலே கானானியரும் பெரிசியரும் அத்தேசத்தில் குடியிருந்தார்கள் (ஆதியாகமம் 13:7).

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் கானானியர்களின் இருப்பை மோசே இரண்டு அடுத்தடுத்த அத்தியாயங்களில் இரண்டு முறை ஏன் குறிப்பிட்டார்? ஆபிரகாமின் நிலைமை அவர்களுடைய நிலைமைகளுக்கு மிகவும் ஒத்ததாக இருந்தது என்பதை இஸ்ரவேலுக்குக் காண்பிப்பதே அவரது நோக்கங்களில் ஒன்றாகும். இஸ்ரவேலில் மோசேயின் நாட்களில் இருந்ததுபோலவே கானானியர்கள் ஆபிரகாமின் நாளில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் இருந்தார்கள். இருந்தாலும், ஆபிரகாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசித்து, கானானியர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட தேசத்திற்கு தைரியமாக முன்னேறினார். கானானியர்கள் அதை ஆக்கிரமித்திருந்தாலும் தேசத்தை சுதந்தரிப்பதன் மூலமும் தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசிப்பதன் மூலமும் இந்த வழியில் மோசே இஸ்ரவேலர்களை ஆபிரகாமின் தைரியத்தை பின்பற்றும்படி ஊக்குவித்தார். இந்த வழியில் ஆபிரகாம் அவர்களின் முன்மாதிரியாக ஆனார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆபிரகாமின் வாழ்க்கையை நாம் தொடர்ந்து கற்றுக்கொள்ளும்போது, நேர்மறையான மற்றும் எதிர்மறையான உதாரணங்களை வழங்கும் பல பகுதிகளைக் காண முடியும். ஆனால் மூன்றாவது இடத்தில், முற்பிதாவின் வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகள் அவரது நாளில் நிகழ்ந்த நிகழ்வுகளை எவ்வாறு முன்னறிவித்தன அல்லது மாற்றியமைத்தன என்பதைக் காண்பிப்பதன் மூலம் மோசே ஆபிரகாமின் வாழ்க்கையை தனது வாசகர்களின் வாழ்க்கையுடன் இணைத்தார்.

## முன் நிழலிடுதல்கள்

பல விஷயங்களில், வரலாற்று பின்னணிகளின் இணைப்புக்கு அதன் நோக்கத்தை நிறைவேற்ற கதைக்கும் அதன் பார்வையாளர்களுக்கும் மிகக் குறைவான ஒற்றுமையே தேவைப்படுகிறது; உதாரணங்கள் அல்லது மாதிரிகள் பார்வையாளர்களுக்குப் பொருத்தமாக இருப்பதற்கு கதைக்கும் அதன் பார்வையாளர்களுக்கும் இடையில் அதிக ஒற்றுமை இருப்பது அவசியம். ஆனால் பல ஒற்றுமைகள் இருக்கும்போது மட்டுமே முன் நிழலிடுதல் ஏற்படுகிறது, ஆபிரகாமின் ”அந்த உலகம்” இஸ்ரவேலின் ”அவர்களின் உலகம்” போலவே தோன்றுகிறது. இப்போது இந்த வகையான விரிவான தொடர்பு ஆபிரகாமுடைய வாழ்க்கையின் கதைகளில் அரிதாகவே நிகழ்கிறது, ஆனால் அவ்வப்போது மோசே ஆபிரகாமின் நாட்களை தனது நாளில் நடந்த நிகழ்வுகளுக்கு நெருக்கமான விதங்களில் விவரித்தார்.

”வரலாறு பெரும்பாலும் மீண்டும் நிகழ்கிறது” என்ற பழமொழியை நம்மில் பலர் கேள்விப்பட்டிருக்கிறோம். வரலாற்று நிகழ்வுகளின் இரண்டு தொகுப்புகள் எப்போதும் ஒரே மாதிரியாக இருக்காது என்பதை நாம் அனைவரும் நிச்சயமாக அறிவோம். ஆனால் சில நேரங்களில் நிகழ்வுகள் மிகவும் ஒத்ததாக இருக்கின்றன, அதாவது இரண்டாவது நிகழ்வு முதல் நிகழ்வைப் போலத் தெரிகிறது. வேதாகம எழுத்தாளர்கள் கடந்த கால நிகழ்வுகளை தங்கள் பார்வையாளர்களின் வாழ்க்கையில் மீண்டும் மீண்டும் நிகழ்வதைப் பார்த்தபோது, அவர்கள் பெரும்பாலும் இந்த தொடர்பை தெளிவுபடுத்தினர். இந்த நேரடி நுட்பம் முன் நிழலிடுதல் என்று அழைக்கப்படுகிறது.

முன் நிழலிடுதலுக்கான ஒரு உதாரணம் ஆதியாகமம் 15:1–21 இல் ஆபிரகாம் தேவனுடனான உடன்படிக்கையை விவரிக்கும் நன்கு அறியப்பட்ட அத்தியாயத்தில் காணப்படுகிறது. ஒரு உடன்படிக்கை சடங்கு செய்ய தயாராவதற்கு அவரை அழைப்பதன் மூலம் அவருடைய சந்ததியினர் ஒரு நாள் கானான் தேசத்தை சுதந்தரிப்பார்கள் என்று தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் செய்தார். ஆபிரகாம் சில விலங்குகளை பாதியாக வெட்டி, வெட்டப்பட்ட மாமிசத்தின் துண்டுகளை ஒரு பாதையின் இருபுறமும் வைப்பதன் மூலம் தயார் செய்தார். முற்பிதா தூங்கிவிட்ட பிறகு, முதல் பார்வையாளர்கள் தங்கள் நாளில் பெற்ற அனுபவத்திற்கு ஒத்த ஒரு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தரிசனத்தை தேவன் ஆபிரகாமுக்குத் தந்தார். ஆதியாகமம் 15:17 இல் நாம் இதை வாசிக்கிறோம்:

> சூரியன் அஸ்தமித்து காரிருள் உண்டானபின்பு, இதோ, புகைகிற சூளையும், அந்தத் துண்டங்களின் நடுவே கடந்துபோகிற அக்கினிஜுவாலையும் தோன்றின (ஆதியாகமம் 15:17).

இந்த வேத பகுதியின் பெரிய சூழலில், இந்த புகைக்கிற சூளையும் எரியும் அக்கினியும் தேவனையே குறிக்கிறது. அவர் விலங்குகளின் வெட்டுண்ட மாமிசங்களுக்கிடையில் கடந்து செல்வதை இது குறிக்கிறது என்பதைக் கற்றுக்கொள்கிறோம், அவர் ஆபிரகாமின் சந்ததியினருக்கு வாக்குத்தத்தம் செய்த நிலத்தை நிச்சயமாகக் கொடுப்பார் என்பதன் உறுதியே இது.

இப்போது அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளுங்கள். ஆதியாகமம் 15:17 இல் தேவன் தம்முடைய சந்ததியினருக்கு வாக்குத்தத்தம் செய்த தேசத்தைக் கொடுப்பார் என்று உறுதியளிப்பதற்காக தேவன் ஆபிரகாமுக்கு முன்பாக புகைக்கிற அக்கினியாக கடந்து சென்றார். இப்போது, நவீன வாசகர்களாகிய நமக்கு புகை மற்றும் நெருப்பாகத் தோன்றுவதன் மூலம் ஆபிரகாமுக்கு தேவன் உறுதியளித்த விதம் ஒரு விசித்திரமாகத் தோன்றலாம். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி தன்னை பின்தொடர்ந்த இஸ்ரவேலர்களுக்கு ஆபிரகாமின் வாழ்க்கையைப் பற்றி மோசே எழுதியதை நாம் நினைவில் வைத்திருக்கும்போது, இந்த விவரத்தை அவர் சேர்த்துக் கொள்வதில் ஆச்சரியமில்லை. இஸ்ரவேலரின் பயணங்கள் முழுவதும், புகைக்கிற சூளையையும் அக்கினிஜுவாலையையும் ஒத்திருக்கும் வகையில் தேவன் இஸ்ரவேலுக்கு முன் தோன்றினார். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி அவர்களை வழிநடத்திய மேக ஸ்தம்பத்தில், தேவன் அவர்களுக்கும் புகை மற்றும் நெருப்பாகத் தோன்றினார்.

ஆகவே, ஆபிரகாமுக்கு தேவன் தோன்றியது மோசேயின் நாளில் இஸ்ரவேலருக்குத் தோன்றிய விதத்திற்கு முன் நிழலாட்டமாக இருந்தது. தேவன் இந்த விதத்தில் தனக்கு முன்பாகச் சென்றதால் ஆபிரகாம் தேசத்தை சுதந்தரிக்க முடியும் என்ற உறுதிமொழியைப் பெற்றதைப் போல, இந்தக் கதையைக் கேட்ட இஸ்ரவேலர்கள் தங்கள் நாளிலும் தேசத்தை சுதந்தரிப்போம் என்ற உறுதிமொழியைப் பெற்றிருக்க வேண்டும்.

ஆதியாகமம் 12:10–20 இல் ஆபிரகாம் எகிப்திலிருந்து மீண்டு வந்த அத்தியாயத்தில் இன்னும் விரிவான முன் நிழலிடுதல் நிகழ்வைக் காண முடியும். எகிப்து பற்றிய அவர்களின் பார்வையில் இஸ்ரவேலை வழிநடத்த இந்த வேதபகுதி எழுதப்பட்டது. இந்த விஷயத்தில், மோசே முழு அத்தியாயத்தையும் கட்டியெழுப்பினார், இதனால் அவரது தலைமையில் இஸ்ரவேலர்களின் அனுபவம் ஆபிரகாமின் அனுபவத்திற்கு இணையாக



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இருந்தது. ஆதியாகமம் 12:10-20 இல் ஆபிரகாம் கானான் தேசத்தில் பஞ்சம் ஏற்பட்டதால் எகிப்தில் தங்கியிருந்தார், பார்வோன் சாராவை தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்றதால் எகிப்திலிருந்து திரும்பி வர தாமதமாகி விட்டது, ஆனால் தேவன் பார்வோனின் வீட்டில் வாதைகளை அனுப்பி ஆபிரகாமை விடுவித்தார். பார்வோன் ஆபிரகாமை எகிப்திலிருந்து அனுப்பிவைத்தார், ஆபிரகாம் எகிப்திலிருந்து பெரும் செல்வத்துடன் வெளியேறினார்.

ஆபிரகாமைப் பற்றிய இந்த கதை பிற்காலத்தில் இஸ்ரவேல் தேசத்தின் அனுபவத்திற்கு முன் நிழலிடுதலாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆபிரகாமைப் போலவே, கானான் தேசத்தில் பஞ்சம் ஏற்பட்டதால் அவர்கள் எகிப்துக்குப் புறப்பட்டார்கள், அவர்கள் பார்வோனால் அங்கேயே சிறைப்பிடிக்கப்பட்டனர், தேவன் பார்வோனின் வீட்டிற்கு அனுப்பிய வாதையால் விடுவிக்கப்பட்டனர், பார்வோன் இஸ்ரவேலை விடுவிக்க உத்தரவிட்டார், இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து செல்வங்களுடன் திரும்பினார்கள். மோசே இந்த விவரங்களை வேண்டுமென்றே வடிவமைத்தார், இதனால் அது தனது பார்வையாளர்களின் அனுபவங்களுக்கு முன் நிழலிடுதலாக அமைந்தது. ஆபிரகாமின் கதைகளில் இந்த வகையான விரிவான முன் நிழலிடுதல்கள் அரிதானது, ஆனால் அத்தகைய இணைப்புகள் ஆபிரகாமின் கதைகளில் அங்கும் இங்கும் தோன்றும்.

ஆபிரகாமின் வாழ்க்கை முழுவதையும் நாம் வாசிக்கும்போது, மூன்று இணைப்புகளையும் வெவ்வேறு வழிகளிலும் வெவ்வேறு நேரங்களிலும் காண்போம். அவர்களின் அனுபவங்களின் வரலாற்றுப் பின்னணியை அவர்களுக்கு வழங்குவதன் மூலமும், பின்பற்றுவதற்கும் நிராகரிப்பதற்கும் அவர்களுக்கு மாதிரிகள் வழங்குவதன் மூலமும், ஆபிரகாமின் வாழ்க்கை பலரின் அனுபவங்களுக்கு எவ்வாறு முன் நிழலிடுதலாக இருந்தது என்பதைக் காண்பிப்பதன் மூலமும் ஆபிரகாமுடைய வாழ்க்கையின் "அந்த உலகத்தை" மோசே "தனது முதல் பார்வையாளர்களின் உலகத்துடன்" இணைத்தார்.

ஆபிரகாமுக்கும் அவருடைய இஸ்ரவேல் பார்வையாளர்களுக்கும் இடையில் மோசே ஏற்படுத்திய தொடர்புகளின் வகைகளை இப்போது நாம் கண்டிருக்கிறோம், ஆபிரகாமுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு முக்கிய படியும் முதல் பார்வையாளர்களின் வாழ்க்கையுடன் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளது என்பதைச் சுருக்கமாகக் கூறுவது உதவியாக இருக்கும்.

## தொகுப்பு

ஆபிரகாமின் வாழ்க்கை ஐந்து சமச்சீர் படிகளாகப் பிரிக்கப்படுவதை நீங்கள் நினைவில் கொள்வீர்கள். இந்த ஒவ்வொரு பிரிவிலும் ஆபிரகாமைப் பற்றிய கதைகளை தனது முதல் பார்வையாளர்களின் சூழ்நிலைகளுடன் இணைக்க மோசே வழிகளைக் கண்டுபிடித்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முதலாவதாக, எகிப்திலிருந்து அவரைப் பின்தொடர்ந்த மக்களின் பின்னணி மற்றும் ஆரம்ப அனுபவங்களுடன் இணைந்த வழிகளில் ஆபிரகாமின் பின்னணி மற்றும் ஆரம்ப அனுபவங்களை மோசே சொன்னார். ஆபிரகாமும் இஸ்ரவேலரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஆபிரகாமும் இஸ்ரவேலரும் கானான் தேசத்தை சுதந்தரிக்க தேவனால் அழைக்கப்பட்டனர். எனவே, மோசே வரலாற்று பின்னணியைக் கொடுத்தார், ஆபிரகாமை ஒரு மாதிரியாக அமைத்தார், மேலும் ஆபிரகாமின் வாழ்க்கை முதல் பார்வையாளர்களின் அனுபவங்களுக்கு முன் நிழலிடுதலாக இருக்கும் வழிகளைக் காட்டினார்.

இரண்டாவதாக, ஆபிரகாம் மற்றவர்களுடன் கொண்டிருந்த ஆரம்பகால தொடர்புகளை தனது பார்வையாளர்களுடன் இணைக்கும் வழிகளில் மோசே விவரித்தார். ஆபிரகாம் எகிப்தியர்களுடன் எவ்வாறு நடந்துகொண்டார் என்பதைப் பற்றி அவர் பேசினார், ஏனென்றால் இஸ்ரவேலரும் எகிப்தியர்களுடன் அவர்களுடைய நாளில் தொடர்பு கொண்டார்கள். அவர் ஆபிரகாம் மற்றும் லோத்து பற்றி பேசினார், ஏனென்றால் இஸ்ரவேலர்கள் லோத்தின் சந்ததியான, மோவாபியர்கள் மற்றும் அம்மோனியர்களுடன் தொடர்பு கொண்டார்கள். இஸ்ரவேலுக்கு வெளிநாட்டு மன்னர்களுடனும் கானானிய நகரங்களுடனும் இதே போன்ற அனுபவங்கள் இருந்ததால் கிழக்கிலிருந்து வந்த மன்னர்கள் பற்றியும், கானானில் இருந்த சோதோமின் ராஜா பற்றியும் அவர் எழுதினார்.

மூன்றாவதாக, ஆபிரகாமுடனான தேவனின் உடன்படிக்கையைப் பற்றி மோசே எழுதினார், ஏனென்றால் இஸ்ரவேலர்களும் தேவனோடு உடன்படிக்கை செய்து கொண்டார்கள். தேவனுடனான ஆபிரகாமின் உடன்படிக்கை தேவன் இஸ்ரவேலுடன் செய்த உடன்படிக்கைக்கு பல வழிகளில் முன் நிழலிடுதலாக இருந்தது.

நான்காவதாக, ஆபிரகாம் பிற மக்களுடன் கொண்ட தொடர்புகளைப் பற்றி மோசே எழுதினார். இஸ்ரவேலர் தங்கள் நாளிலும் கானானிய நகரங்கள், மோவாபியர்கள், அம்மோனியர்கள் மற்றும் பெலிஸ்தர்கள் போன்றவர்களை எதிர்கொண்டதால், சோதோம், கொமோரா, லோத்து, பெலிஸ்தியனான அபிமெலேக் ஆகியோரைப் பற்றி அவர் எழுதினார்.

ஐந்தாவது, மோசே ஆபிரகாமின் சந்ததியையும் மரணத்தையும் பற்றி தனது இஸ்ரவேல் வாசகர்களை இணைக்கிற வகையில் எழுதினார். இஸ்ரவேல் பார்வையாளர்கள் ஈசாக்கிலிருந்து வந்தவர்கள் என்பதால் அவர் ஆபிரகாமின் விசேஷித்த மகனும் வாரிசுமான ஈசாக்கை மையப்படுத்தினார். இஸ்ரவேலுக்கு தேவன் வாக்குத்தத்தம் செய்த தேசத்தில் அந்த மைதானம் இருந்ததால் சாராவின் புதைகுழியின் மீது அவர் கவனத்தை ஈர்த்தார். ஆபிரகாமின் வாரிசுகள் அல்லாத ஆபிரகாமின் மற்ற குமாரர்கள் மீது அவர் கவனம் செலுத்தினார், குறிப்பாக இஸ்மவேல் மீது கவனம் செலுத்தினார்,

ஏனென்றால் இஸ்ரவேல் இஸ்மவேலர்களை அவர்களுடைய நாளில் சமாளிக்க வேண்டியிருந்தது.

ஆகவே, ஆபிரகாமைப் பற்றி மோசே எழுதியது போல, அவருடைய கதைகளுக்கும் இஸ்ரவேல் பார்வையாளர்களின் அனுபவங்களுக்கும் இடையில் பலவிதமான தொடர்புகளை அவர் ஏற்படுத்தியிருப்பதைக் காண்கிறோம். இஸ்ரவேலர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி அவரைப் பின்தொடர்ந்தபோது அவர்களுக்கு குறிப்பிடத்தக்க வழிகாட்டுதல்களை வழங்குவதற்காக அவர் இதைச் செய்தார்.

ஆபிரகாமின் வாழ்க்கையை மோசே தனது முதல் இஸ்ரவேல் பார்வையாளர்களுடன் இணைத்த முக்கிய வழிகளை இப்போது நாம் பார்த்திருக்கிறோம், உண்மையான அர்த்தம் பற்றிய மற்றொரு முக்கியமான கேள்வியைக் கேட்க வேண்டும். முதல் பார்வையாளர்கள் மீது இந்த இணைப்புகள் உண்டாக்கின தாக்கங்கள் என்ன? ஆபிரகாமுடைய வாழ்க்கையின் கதைகளிலிருந்து அவர்கள் என்ன கற்றுக்கொள்ள வேண்டும்?

# நடைமுறைப்படுத்தல்கள்

ஆதியாகமத்தில் உள்ள ஆபிரகாமின் வாழ்க்கையைப் போன்ற சிக்கலான வரலாற்றை எழுத மக்கள் நேரம் எடுத்துக்கொள்ளும்போது, அவர்களுக்கு எல்லா வகையான உந்துதல்களும் குறிக்கோள்களும் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அவர்களின் கதைகள் தங்கள் பார்வையாளர்களுக்கு பல தாக்கங்களை ஏற்படுத்த வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். உண்மையில், ஆபிரகாமின் வாழ்க்கையை மோசே எழுதியபோது, அவற்றை முழுமையாக புரிந்துகொள்ள இயலாத படி அவருடைய நோக்கங்கள் பல மடங்கு இருந்தன, அவை அனைத்தையும் ஒரு சில வாக்கியங்களில் குறிப்பிடுவது மிகக் கடினமாக இருக்கும். அதே சமயம், ஆபிரகாமைப் பற்றிய கதைகளிலிருந்து தனது முதல் பார்வையாளர்கள் ஈர்க்கப்படுவார்கள் என்று மோசே நம்பிய முக்கிய நடைமுறைப்படுத்தல்களை சுருக்கமாகக் கூறலாம்.

ஆபிரகாமின் வாழ்க்கையில் உள்ள மூல நடைமுறைப்படுத்தல்களை மூன்று படிகளில் ஆராய்வோம். முதலில், இந்த கதைகள் முதல் பார்வையாளர்களுக்கு ஏற்படுத்திய அடிப்படை தாக்கத்தைப் பற்றி விவரிப்போம். இரண்டாவதாக, ஆபிரகாமுடைய வாழ்க்கையின் நான்கு முக்கிய கருப்பொருள்களில் இந்த கதைகளின் தாக்கம் எவ்வாறு வெளிப்படுகிறது என்பதைப் பார்ப்போம். மூன்றாவதாக, ஆபிரகாமைப் பற்றிய மோசேயின் கதைகளில் உள்ள ஐந்து படிகளில் ஒவ்வொன்றின் மூல



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நடைமுறைப்படுத்தல்களையும் தாக்கங்களையும் சுருக்கமாகக் கூறுவோம். இந்தக் கதைகள் ஏற்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள அடிப்படைத் தாக்கத்தை முதலில் பார்ப்போம்.

## அடிப்படைத் தாக்கம்

மிகவும் பொதுவான சொற்களில் கூறினால், ஆபிரகாமின் கதையின் நோக்கத்தை ஏன் மற்றும் எப்படி எகிப்தை விட்டு இஸ்ரவேலர்கள் வெளியேறி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை சுதந்தரிப்பதை நோக்கித் தொடர இஸ்ரவேலுக்குக் கற்பிப்பதற்காக மோசே ஆபிரகாமைப் பற்றி எழுதினார் என்பதை இந்த வழியில் சுருக்கமாகக் கூற இது உதவுகிறது. வேறு வார்த்தைகளில் கூறினால், ஆபிரகாமில் அவர்களுடைய வாழ்க்கையின் வரலாற்று பின்னணியைப் பார்ப்பதன் மூலமும், ஆபிரகாமின் கதைகளில் பின்பற்றவும் நிராகரிக்கவும் மாதிரிகள் அல்லது எடுத்துக்காட்டுகளைக் கண்டுபிடிப்பதன் மூலமும், அவருடைய வாழ்க்கை அவர்களின் வாழ்க்கைக்கு எவ்வாறு முன் நிழலிடுதலாக இருந்தது என்பதையும் புரிந்துகொள்வதன் மூலம், மோசேயைப் பின்தொடர்ந்த இஸ்ரவேலர்கள் தங்கள் தேவனின் நோக்கத்தைத் தொடருவதற்கான வழிகளைக் காண முடிந்தது.

வேதத்தின் சாட்சியின் அடிப்படையிலும் இயேசுவின் சாட்சியின் அடிப்படையிலும் ஆதியாகமம் புத்தகம் மோசேயின் நாட்களிலிருந்து வந்தது என்பதை நாம் உறுதியாக நம்பினாலும், இப்போது நம்மிடம் இருக்கக்கூடிய கதை முழுவதையும் மோசே தான் எழுதி முடித்தார் என்பதை உறுதியாக கூற முடியாது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். எது எப்படியிருந்தாலும், ஆபிரகாமின் வரலாற்றை எழுதும் போது மோசேயின் முக்கிய அக்கறையானது இரண்டு தலைமுறையினருக்கும் ஒன்றாகவே இருந்திருக்கும் என்று நாம் உறுதியாக சொல்ல முடியும். அவர்களுடைய இருதயங்களை எகிப்திலிருந்து விலக்கி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை சுதந்தரிப்பதற்கு அவர்களுக்கு வலியுறுத்தும் பொருட்டு ஆபிரகாமைப் பற்றி அவர் எழுதினார்.

மூல பார்வையாளர்களுக்கான இந்த பொதுவான உட்குறிப்பை மிகைப்படுத்துவது எளிதல்ல. எகிப்துக்குத் திரும்பி வரக்கூடாது என்றும் கானானைக் சுதந்தரிப்பதில் வெற்றிபெற வேண்டும் என்றும் தன்னைப் பின்தொடர்ந்த இஸ்ரவேல் தேசத்தை ஊக்குவிப்பதற்காக மோசே எழுதினார், ஆபிரகாமின் வாழ்க்கையை நாம் இன்றைய கால வாழ்வில் நடைமுறைப்படுத்துவதற்கு இந்த பரந்த உட்குறிப்பு நமக்கு வழிகாட்டுகிறது. மோசேயின் நாட்களில் இஸ்ரவேலால் ஆரம்பித்த பயணத்தை உண்மையில் முடிக்கும் ஒரு பயணத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் இருக்கிறோம். நாம் புதிய வானத்தையும் புதிய பூமியையும் நோக்கி போகிறோம். ஆகவே, ஆபிரகாமின் கதைகளை நம் வாழ்வில் சரியாகப் நடைமுறைப்படுத்துவதற்கு, கானானை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நோக்கி தொடர்ந்து செல்லும்படி மூல பார்வையாளர்களுக்கு அவர்கள் அறிவுறுத்திய வழிகளில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த கவனத்தை கொஞ்சம் கொஞ்சமாகத் திறப்பதற்கு, ஆதியாகமத்தின் இந்த பகுதியில் நாம் ஏற்கனவே அடையாளம் கண்டுள்ள நான்கு முக்கிய கருப்பொருள்களுக்குத் திரும்புவதன் மூலம் மோசேயின் நோக்கத்தை இன்னும் விரிவாக ஆராய வேண்டும்.

# முக்கிய கருப்பொருள்கள்

முற்பிதாவினுடைய வரலாற்றின் இந்த பகுதிக்கு ஒத்திசைவைத் தரும் குறைந்தது நான்கு கருப்பொருள்களையாவது ஆதியாகமம் 12:1–3 முன்வைக்கிறது என்று இந்த பாடத்தில் முன்னர் நாம் பரிந்துரைத்ததை நீங்கள் நினைவில் கொள்வீர்கள். இந்த நான்கு கருப்பொருள்கள் மோசே தனது கதைகளை வடிவமைத்த மைய தாக்கத்தை வெளிப்படுத்துகின்றன. முதலாவதாக, அவர் ஆபிரகாமுக்கு தேவன் காட்டிய தெய்வீக கிருபையில் கவனம் செலுத்தினார்; இரண்டாவதாக, அவர் ஆபிரகாமின் விசுவாசத்தில் கவனம் செலுத்தினார்; மூன்றாவதாக, அவர் ஆபிரகாமுக்கு அளிக்கப்பட ஆசீர்வாதங்களில் அக்கறை கொண்டிருந்தார்; நான்காவதாக, அவர் ஆபிரகாம் *வழியாக* கிடைக்கக்கூடிய ஆசீர்வாதத்தில் கவனம் செலுத்தினார். இந்த நான்கு நோக்கங்களின் அடிப்படையில் ஆபிரகாமைப் பற்றி எழுதுவதற்கான மோசேயின் மூல நோக்கத்தைப் பற்றி சிந்திக்க இது உதவுகிறது.

## தெய்வீக கிருபை

முதலில், ஆபிரகாமுக்கு தேவன் இரக்கம் காட்டிய வழிகளைப் பற்றி மோசே எழுதினார்.

பரந்த வகையில், ஆபிரகாமுடனான உறவின் ஆரம்ப வருஷங்களிலும், அவனுடைய வாழ்நாள் முழுவதும் தினசரி வாழ்க்கையிலும் தேவன் மிகுந்த கிருபையைக் காட்டியிருப்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம். இந்த தெய்வீக கிருபையின் நோக்கமானது மோசேயின் நாளில் வாழ்ந்த இஸ்ரவேலருக்கு தேவன் மிகுந்த கருணை காட்டியதை நினைவூட்டுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. எகிப்திலிருந்து சீனாய் மலைக்கு அவர்களை அழைத்து வந்தபோது தேவன் அவர்களுக்கு ஆரம்பகால கிருபையைக் காட்டியிருந்தார். எதிர்காலத்தில் கானான் தேசத்தை வெற்றி கொள்வதற்கு அவர் அவர்களைத் தயார்படுத்தியபோதும், நாளுக்கு நாள், அவர் தொடர்ந்து இரக்கம் காட்டினார்.

யாத்திராகமம் 19:4 இல் சீனாய் மலையில் தேவன் பேசிய நன்கு அறியப்பட்ட வார்த்தைகள் தேவனுடைய கிருபையைப் பற்றி இவ்வாறு பேசுகின்றன:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக்கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள். (யாத்திராகமம் 19:4).

வருத்தப்படும் விதமாக, மோசே வழிநடத்திய இஸ்ரவேலர்கள் தேவனிடமிருந்து எவ்வளவு இரக்கம் பெற்றார்கள் என்பதை மறந்துவிட்டார்கள். தேவனும் மோசேயும் எகிப்தின் சுகபோகங்களிலிருந்து அவர்களை அழைத்துச் சென்று ஏமாற்றிவிட்டதாக அவர்கள் ஆரம்பத்தில் புகார் கூறினர். அவர்கள் வனாந்தரத்தில் உணவு மற்றும் நீர் பற்றி புகார் செய்தனர். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை வெற்றிகொள்ள நுழையும்படி அவர்களை அழைத்தபோது தேவன் அவர்களிடம் அதிகம் எதிர்பார்த்ததாக அவர்கள் நினைத்தார்கள். ஆகவே, ஆபிரகாமுக்கு தேவன் இரக்கம் காட்டிய வழிகளை மோசே அடிக்கடி வலியுறுத்தினார், தேவன் தம்மை ஆசீர்வதித்த வழிகளையும், தேவன் அவர்களுக்குக் காட்டிய இரக்கங்களையும் தனது முதல் பார்வையாளர்களுக்கு நினைவுபடுத்துகிறார்.

## ஆபிரகாமுடைய தேவப்பற்று

இரண்டாவது இடத்தில், கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படி தேவன் எதிர்பார்த்த பல வழிகளில் ஆபிரகாம் கீழ்படிந்தார் என்று மோசே ஆபிரகாமின் விசுவாசத்தை வலியுறுத்தினார் என்பதைப் பார்த்தோம். முற்பிதா தனது கட்டளைகளுக்கு உண்மையுள்ளவராக இருப்பதை தேவன் எதிர்பார்த்தார் என்று மோசே பலமுறை வலியுறுத்தினார், ஏனெனில் இந்த காரியம் அவரைப் பின்பற்றிய இஸ்ரவேலர்களுக்கும் பொருந்தியது. உண்மைத்தன்மையின் அவசியம் குறித்த இந்த கவனம் மோசேயின் நாளில் இஸ்ரவேலுடன் பேசப்பட்டது. யாத்திராகமம் 19:4-5 இல் சீனாய் மலையில் தேவன் தொடர்ந்து இஸ்ரவேலுடன் உரையாற்றிய விதத்தைக் கேளுங்கள்:

> நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக்கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள் (யாத்திராகமம் 19:4-5).

ஒரு பொக்கிஷமான உடைமையாக மாறுவதற்கான ஆசீர்வாதங்கள் இஸ்ரவேலின் உண்மையைப் பொறுத்தது என்பதை இங்கே கவனியுங்கள். தேவன் தேசத்திற்கு மிகுந்த இரக்கம் காட்டியிருந்தாலும், ஒவ்வொரு தலைமுறையிலும் ஒவ்வொரு நபரின் நிலையானது தேவனுடைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கட்டளைகளுக்கு அவர்கள் எவ்வாறு பதிலளித்தார்கள் என்பதைப் பொறுத்தது.

இப்போது, நாம் பார்த்தபடி, ஆபிரகாமுக்கு வழங்கப்பட்ட முக்கிய பொறுப்பு என்னவென்றால் அது அவர் கானான் தேசத்திற்குச் செல்வதுதான். மோசே இந்த பொறுப்பை வலியுறுத்தினார், ஏனென்றால் தன்னை பின்பற்றி வருகிற இஸ்ரவேல் கானான் தேசத்தை சுதந்தரிக்கிற வரை அதே முயற்சியுடன் செயல்பட வேண்டும் என்று விரும்பினார். ஆபிரகாமின் மற்ற பொறுப்புகளைப் பற்றி மோசே எழுதியது போல, அவருடைய நாளின் இஸ்ரவேலர்களுக்கு அவர்களுடைய பல பொறுப்புகளைப் பற்றி கற்பிக்க அவர் அவ்வாறு செய்தார். ஆபிரகாமின் விசுவாசத்தை நிரூபிக்க தேவைப்பட்ட பல காரியங்கள், முதல் பார்வையாளர்கள் தேவனுடைய கட்டளைகளுக்கு விசுவாசமாகவும் உண்மையாகவும் இருக்க வேண்டும் என்பதைத்  தெளிவாகக் கூறின.

## ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள்

மூன்றாவது இடத்தில், ஆபிரகாமுக்கு தேவன் வாக்குத்தத்தம் செய்த ஆசீர்வாதங்களின் கருப்பொருளின் முக்கியத்துவத்தையும் நாம் பார்த்தோம். ஆபிரகாமைப் பற்றிய தனது கதைகளில், மோசே ஒரு பெரிய தேசத்தைக் குறித்து  வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்கள், செழிப்பு மற்றும் ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததியினருக்கும் ஒரு பெரிய பெயர் ஆகியவற்றில் கவனம் செலுத்தினார். ஆபிரகாம் தனது வாழ்நாளில் இந்த ஆசீர்வாதங்களில் சிலவற்றை முன்னுகர்ந்த  பல சந்தர்ப்பங்களைக் கூட நாம் காண்கிறோம். மேலும் பல சந்தர்ப்பங்களில் ஆபிரகாமின் கதைகள் வரவிருக்கும் தலைமுறைகளில் இந்த ஆசீர்வாதங்களின் எதிர்கால நிறைவேறுதல்களை  மையமாகக் கொண்டிருந்தன. மோசே ஆபிரகாமின் ஆசீர்வாதங்களில் இந்த வழிகளில் கவனம் செலுத்தினார், ஏனென்றால் இந்த வாக்குத்தத்தங்கள் ஆபிரகாமின் சந்ததியினருக்கும், மோசே வழிநடத்திய இஸ்ரவேல் ஜனங்களுக்கும் இருந்தன. இஸ்ரவேல் மக்களுக்கும் பெரும் ஆசீர்வாதங்கள் வாக்குத்தத்தம் செய்யப்பட்டன. அவர்கள் ஒரு பெரிய தேசமாக மாறவும், முன் எப்போதுமில்லாத செழிப்பை அனுபவிக்கவும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழைந்தபோது ஒரு பெரிய பெயரைப் பெறவும் வேண்டியிருந்தது.

உண்மையில், ஆபிரகாமைப் போலவே, ஆதியாகமம் புத்தகம் எழுதப்பட்ட நேரத்தில் இஸ்ரவேலும் பல ஆசீர்வாதங்களை முன்னுகர்ந்தது. இந்த வாக்குத்தத்தங்கள் சிலவற்றின் நிறைவேறுதலை அவர்கள் ஏற்கனவே தங்கள் வாழ்க்கையில் காண ஆரம்பித்தார்கள். ஆயினும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழைந்தவுடன்  எதிர்காலத்தில் நிறைவேற வேண்டிய ஆசீர்வாதங்கள் இன்னும் பல உள்ளன. யாத்திராகமம் 19:6 இல் சீனாயில் இஸ்ரவேலுக்குரிய இந்த எதிர்கால ஆசீர்வாதங்களைப் பற்றி தேவன் பேசினார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் (யாத்திராகமம் 19:6).

ஆபிரகாமுக்கு அவருடைய நாளில் இஸ்ரவேலின் நம்பிக்கையை உயர்த்துவதாக தேவன் வாக்குத்தத்தம் செய்த ஆசீர்வாதங்களைப் பற்றி மோசே எழுதினார். முற்பிதாவுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்கள் பற்றி அவர்கள் வாசிக்கும்போது, அவர்களுக்காக தேவன் எவ்வாறு பெரிய ஆசீர்வாதங்களைக் வைத்திருந்தார் என்பதை அவர்களால் தெளிவாகக் காண முடிந்தது.

## ஆபிரகாமின் மூலம் ஆசீர்வாதங்கள்

நான்காவது இடத்தில், தேவனுடைய ஆசீர்வாதங்கள் முற்பிதாவின் மூலமாக உலகம் முழுவதும் வரும் என்பதை ஆபிரகாமின் கதைகள் வெளிப்படுத்தியதையும் நாம் பார்த்தோம். உங்கள் நினைவில் இருப்பதைப் போல, ஆசீர்வாதங்கள் ஆபிரகாம் மூலமாக எளிமையான முறையில் வராது. ஆபிரகாமின் நண்பர்களை ஆசீர்வதித்து, எதிரிகளை சபிக்கும் ஒரு செயல்முறையின் மூலம் தேவன் ஆபிரகாமுக்கு வெற்றியைத் தருவார் என்று ஆதியாகமம் 12:3 இல் அறிகிறோம். பல்வேறு அத்தியாயங்களில், ஆபிரகாம் தனது சொந்த வாழ்நாளில் இந்த செயல்முறையின் முன்னுகர்வுகளை தேவன் எவ்வாறு பல்வேறு நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பிற மக்களுடன் பேசினார் என்பதை மோசே சுட்டிக்காட்டினார். ஆபிரகாமின் வாழ்க்கையைப் பற்றிய கதைகளில் பல சந்தர்ப்பங்களில், பல காரியங்கள் எதிர்காலத்தில் நிறைவேறும் என்று மோசே சுட்டிக்காட்டினார்.

மோசே இந்த கருத்தை வலியுறுத்தினார், ஏனென்றால் அவருடைய நாளில் அவரைப் பின்பற்றிய இஸ்ரவேல் ஜனங்களுக்கு இது மிகவும் பொருத்தமானதாக இருந்தது. மற்றவர்களுக்கு ஒரு ஆசீர்வாதமாக இருப்பீர்கள் என்று தேவன் அவர்களுக்கு உறுதி அளித்தார், ஏனென்றால் அவர் அவர்களுடைய நண்பர்களை ஆசீர்வதிப்பார், எதிரிகளை சபிப்பார். அவர்களும் தங்கள் நாளில் பல்வேறு குழுக்களுடன் உரையாடியதால் இந்த வாக்குத்தத்தங்களின் முன்னுகர்வுகளைக் கண்டார்கள். தேவன் தம்முடைய நண்பர்களாக இருந்தவர்களை ஆசீர்வதிப்பதையும், எதிரிகளை சபிப்பதையும் அவர்கள் முன்பே பல சந்தர்ப்பங்களில் பார்த்தார்கள். இதைத் தாண்டி, இஸ்ரவேலர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழைந்து தேவனுடைய ராஜ்யத்தை பூமியின் பல முனைகளுக்கும் பரப்பும்போது எதிர்காலத்தில் நிறைவேறப்போகும் காரியங்களை நோக்கி அவர்கள் திரும்புவதற்காக மோசே இந்த விஷயங்களில் கவனம் செலுத்தினார். நாம் இப்போது பார்த்தபடி, யாத்திராகமம் 19:6 இல் தேவன் இதை இஸ்ரவேலிடம் கூறினார்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் (யாத்திராகமம் 19:6).

ஆசாரியர்களின் ராஜ்யமாக இருக்க வேண்டும் என்கிற தேசத்தின் இந்த தரிசனம், தேவனுக்கு சேவை செய்யும் ஒரு பரிசுத்த ஜனங்களாக இருப்பதற்கான பாக்கியமான ஆசீர்வாதத்தை தேசமே பெறும் என்பதை வெறுமனே சுட்டிக்காட்டவில்லை, ஆனால் இஸ்ரேலர்கள் உலகெங்கிலும் தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்ற சேவை செய்வார்கள் என்பதையும் சுட்டிக்காட்டியது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி போகும்படி மோசே இஸ்ரவேலரை ஊக்கப்படுத்தியதால், ஆபிரகாமைப் பற்றிய அவரது கதைகள், தேவன் இஸ்ரவேலை தனது ராஜ்யத்தைப் பரப்புவதற்கு எவ்வாறு பயன்படுத்தப் போகிறார் என்ற பார்வையை அவர்களுக்குள் ஊக்குவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆபிரகாமுடைய வாழ்க்கையின் நான்கு முக்கிய கருப்பொருள்கள் முதல் பார்வையாளர்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தின நடைமுறைப்படுத்தல்களை இப்போது நாம் பார்த்திருக்கிறோம், ஆதியாகமம் புத்தகத்திலுள்ள முற்பிதாவின் வாழ்க்கையினுடைய கதையின் ஒவ்வொரு முக்கிய படியும் முதல் பார்வையாளர்களுக்கு ஏற்படுத்தின தாக்கத்தை சுருக்கமாகக் கூறுவோம்.

## ஐந்து படிகள்

ஆபிரகாமுடைய வாழ்க்கையைப் பற்றிய கதைகள் ஐந்து முக்கிய படிகளாகப் பிரிக்கப்படுவது உங்கள் நினைவில் இருக்கும். முதலாவதாக, 11:10–12:9 இல் ஆபிரகாமின் பின்னணி மற்றும் ஆரம்ப அனுபவங்கள்; இரண்டாவதாக, 12:10–14:24 இல் ஆபிரகாம் பிற மக்களின் பிரதிநிதிகளுடன் கொண்டிருந்த முந்தைய தொடர்புகள்; மூன்றாவதாக, 15:1–17:27 இல் தேவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கை; நான்காவதாக, 18:1–21:34 இல் ஆபிரகாம் பிற்காலத்தில் பிற மக்களின் பிரதிநிதிகளுடன் கொண்டிருந்த தொடர்புகள்; ஐந்தாவது, 22:1–25:18 இல் ஆபிரகாமின் சந்ததியும் மரணமும்.

இந்த முக்கிய படிகள் ஒவ்வொன்றும் பல சிறிய பிரிவுகளாக அல்லது அத்தியாயங்களாக பிரிக்கப்படுகின்றன. முதல் பார்வையாளர்களுக்கு மோசே எழுதிய இந்த அத்தியாயங்கள் ஏற்படுத்திய உள்ளடக்கம் மற்றும் சில முக்கிய தாக்கங்களை சுருக்கமாகக் கூறுவோம்.

### பின்னணி மற்றும் முன் அனுபவங்கள்

ஆபிரகாமுடைய வாழ்க்கையின் முதல் படி என்னவென்றால், ஆபிரகாமுடைய பின்னணி மற்றும் முன் அனுபவங்கள், தேவன் ஆபிரகாமை அவருடைய சேவைக்காக அழைத்த ஆபிரகாமுடைய குடும்பம் மற்றும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

காலகட்டத்தின் அம்சங்கள் என்ன என்பது பற்றி அறிவிக்கிறது. பொதுவாகச் சொல்வதென்றால், மோசே அவருடைய மூல பார்வையாளர்களான இஸ்ரவேலர்கள் அவர்களுடைய குடும்பப் பின்னணியையும் தேவனுடைய அழைப்பையும் பற்றி ஆபிரகாமுடைய வாழ்க்கை நிகழ்வுகளிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்த முதல் படியை வடிவமைத்திருக்கிறார்.

இந்த முதல் படி மூன்று தொடர்ச்சியாக இணைக்கப்பட்ட பாகங்கள் அல்லது பிரிவுகளாகப் பிரிகிறது. ஆபிரகாமுடைய வாழ்க்கையானது ஆதியாகமம் 11:10–26 இல் தெய்வீக தயவு பெற்ற ஆபிரகாமினுடைய வம்சத்தை அறிமுகப்படுத்துகிற தலைமுறையுடன் துவங்குகிறது. இந்த வசனங்கள், தேவனுடைய விசேஷித்த தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களாக, தேவனுக்கு முன்பாக தயவுபெற்ற ஒரு குடும்பமான சேமுடைய குடும்பத்தின் இறுதி கதாபாத்திரமாக ஆபிரகாம் இருக்கிறார் என்பதை நிலைநாட்டுகின்றன. இந்த வம்ச வரலாறானது மோசேயினுடைய மூல பார்வையாளர்களான இஸ்ரவேலர்களை ஆபிரகாமினுடைய வம்சமாக, இதே தயவு நிலையைப் பகிர்ந்துகொண்டவர்கள் என்பதை நினைவுபடுத்தியிருக்க வேண்டும். அவர்கள் தேவனால் விசேஷமாக தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள்.

ஆபிரகாமினுடைய பின்னணி மற்றும் முன் அனுபவங்களினுடைய தொடர்ச்சியாக இணைக்கப்பட்ட இரண்டாம் பாகமானது 11:27–32 இல் சொல்லப்பட்டுள்ள மற்றொரு தலைமுறையாகும். சுருக்கமாக, விக்கிரகாராதனை செய்பவராகிய தேராகு கானான் தேசத்திற்குச் செல்ல முயன்று தோற்றுப் போனதை இந்தப் பகுதி சித்தரிக்கிறது. மோசேயினுடைய மூல பார்வையாளர்கள் எளிதாக ஆபிரகாமினுடைய சூழ்நிலைகள் மற்றும் தங்களுடைய சூழ்நிலைகளுக்கிடையே உள்ள ஒற்றுமையைப் கண்டிருப்பார்கள். அவர்களுடைய பெற்றோர்கள் விக்கிரகாராதனையில் ஈடுபட்டவர்களாய் இருந்ததினால் அவர்களால் கானான் தேசத்தை அடைய முடியவில்லை. ஆகவே, ஆபிரகாம் அவருடைய தகப்பனுடைய தப்பிதங்களைச் செய்யாதபடிக்கு விலகினதுபோல, மோசேயைப் பின்பற்றின இஸ்ரவேலர்களும், விக்கிரகாராதனைக்காரர்களாயிருந்து கானானுக்குள் பிரவேசிக்கமுடியாமல் போன யாத்திராகமத்தில் சொல்லப்பட்டுள்ள முதல் தலைமுறையாகிய அவர்களுடைய தாய் தகப்பன்மார்களின் தப்பிதங்களைச் செய்யாதபடிக்கு அவற்றை விட்டு விலக வேண்டும்.

ஆபிரகாமினுடைய பின்னணி மற்றும் முன் அனுபவங்களானது 12:1–9 இல் சொல்லப்பட்டுள்ள கதையானது ஆபிரகாம் கானானுக்கு இடம்பெயருவதை நோக்கி செல்கிறது. தேவன் ஆபிரகாமை கானான் தேசத்திற்கு அழைத்தார், அநேக இடர்பாடுகள் இருந்தபோதிலும் ஆபிரகாம் தேவனுடைய அழைப்பிற்குக் கீழ்ப்படிந்தார். அதே வழியில், மோசேயினுடைய மூல பார்வையாளர்களாகிய இஸ்ரவேலர்களையும் கானான் தேசத்திற்குத் தேவன் அழைத்தார், அநேக இடர்பாடுகள் இருந்தாலும் அவர்களும் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும். ஆகவே, ஆபிரகாமினுடைய கானான்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேசத்தை நோக்கிய இடம்பெயருதலின் கதையானது மோசேயின் நாட்களில் இஸ்ரவேலர்களும் ஆபிரகாமினுடைய பாதச்சுவடுகளைப் பின்பற்றி கானான் தேசத்தை நோக்கி இடம்பெயர வேண்டும் என்ற உண்மையான உட்குறிப்புடையதாய் காணப்படுகிறது.

இந்த மூன்று தொடர்ச்சியாக இணைக்கப்பட்ட பாகங்களுடன், மோசே ஆபிரகாமினுடைய வாழ்க்கையை அறிமுகப்படுத்துகிறார் மற்றும் தேவனைச் சேவிப்பதற்கு சவால்களை எதிர்கொண்டிருந்த அவருடைய மூல பார்வையாளர்களுக்கு குறிப்பிடத்தக்க வழிகாட்டுதலை வழங்கினார்.

## மற்றவர்களுடனான முன் தொடர்பு

ஆதியாகமத்தில் ஆபிரகாமினுடைய வாழ்க்கையின் இரண்டாவது மிகப்பெரிய படியானது, மற்றவர்களுடனான முற்பிதாவினுடைய முன் தொடர்பின் மீது கவனம் செலுத்துகிறது. இந்த அதிகாரங்களானது மூல இஸ்ரவேல் வாசகர்கள் மற்றவர்களுடன் தொடர்புகொள்ளுகிறதற்கான வழிகாட்டுதலுக்கு ஏதுவாக, பிற குழுக்களாகிய ஜனங்களுடன் பல்வேறு வழிகளில் முற்பிதாவின் தொடர்பு எப்படி இருந்தது என்பதை சித்தரிக்கிறது.

தொடர்ச்சியாக இணைக்கப்பட்ட முதல் பாகத்தில், எகிப்திலிருந்து ஆபிரகாமினுடைய மீட்பைப் பற்றி மோசே ஆதியாகமம் 12:10-20 இல் விவரித்திருக்கிறார். பஞ்சத்தின் காரணமாக முற்பிதா எகிப்திற்குச் சென்றதையும், தேவன் பார்வோனுடைய வீட்டாருக்கு வியாதிகளை அனுப்பி எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து அவரை மீட்டதையும் நாம் நினைவு கூறலாம். தேவனுடைய மிகப்பெரிய மீட்பினால் ஆபிரகாம் எகிப்தைவிட்டு பல சம்பத்துகளுடன் வெளியேறினார் மற்றும் அவர் அங்கே ஒருபோதும் திரும்பச் செல்லவில்லை. எகிப்து அவருடைய வீடு அல்ல என்பதை ஆபிரகாம் தெளிவாகக் கற்றுக்கொண்டார்.

மோசேயினுடைய மூல வாசகர்களாகிய இஸ்ரவேலர்கள் அவர்களுடைய சொந்த அனுபவங்கள் ஆபிரகாமினுடைய கதையின் அநேக அம்சங்களை பிரதிபலித்ததைக் கண்டிருக்க முடியும். அவர்களும் பஞ்சத்தின் காரணமாக எகிப்திற்குச் சென்றிருந்தார்கள், தேவன் எகிப்தியர்கள் மீது வியாதிகளை அனுப்பியபோது அவர்களும் மீட்கப்பட்டார்கள்; மற்றும் எகிப்தியர்களிடமிருந்து அநேக சம்பத்துகளைப் பெற்றுக்கொண்டு எகிப்தைவிட்டு வெளியேறினார்கள். எதிர்பாராதவிதமாக, இஸ்ரவேலர்கள் அவர்களுடைய பிரயாணங்களில் இடர்களைச் சந்தித்ததினால், அவர்களில் அநேகர் எகிப்தின் வாழ்வை ஏற்றதாக நினைத்து திரும்பிச்செல்ல விரும்பினார்கள். தொடர்ச்சியாக இணைக்கப்பட்ட இந்த பாகமானது எகிப்து அவர்களுடைய வீடு அல்ல என்பதை மூல பார்வையாளர்களுக்கு தெளிவை ஏற்படுத்தியிருக்கும். தேவன் எப்படி கிருபையாக அவர்களை விடுவித்தார் என்பதை அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்; மற்றும் எகிப்தையும், எகிப்தியர்களையும் வெகு தொலைவில் விட்டுவிட வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மற்றவர்களுடனான ஆபிரகாமினுடைய முன் தொடர்பு பற்றிய இரண்டாம் பாகமானது 13:1–18 இல் சொல்லப்பட்டுள்ள லோத்துவினுடனான சண்டை பற்றிய கதையாகும். ஆபிரகாமினுடைய மனிதர்களுக்கும் லோத்துவினுடைய மனிதர்களுக்குமிடையே நடந்த போராட்டம் பற்றிய இந்தக் கதையானது அனைவரும் நன்கு அறிந்த கதையாகும்; இந்த இரண்டு பிரிவினரும் அவர்களுடைய ஆடுகளுக்கான மேய்ச்சலுக்காக சண்டையிட்டுக்கொண்டிருந்தார்கள். இந்தப் போராட்டத்தின் போது, லோத்து அமைதலுடன் அவன் தெரிந்து கொள்ளும் தேசத்திலே குடியிருக்கும்படியாக அனுமதித்து, ஆபிரகாம் லோத்துவை கனிவுடன் நடத்தினார். ஆதியாகமத்தின் மூல வாசகர்களுக்கு இந்தக் கதை என்ன அர்த்தப்படுத்துகிறது என்பதை புரிந்துகொள்வது சிறிது கடினமாக இருந்திருக்கலாம். உபாகமம் 2 ன் படி, அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி பிரயாணப்பட்டுக் கொண்டிருந்தபோது, லோத்துவின் சந்ததியார் அவர்களுடைய முன்னோர்களின் தேசத்திலே அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படியாக அவர்களைக் கனிவுடன் நடத்தும்படி மோசே இஸ்ரவேலர்களுக்குக் கட்டளையிட்டார். லோத்துவினிடத்தில் ஆபிரகாமின் கனிவான நடக்கையானது இஸ்ரவேலர்கள் அவர்கள் வாழ்ந்த காலங்களில் எப்படி மோவாபியர்களை நடத்த வேண்டும் என்று அவர்களுக்குக் காட்டியது.

இந்த சிக்கலான கதையானது ஆபிரகாம் எப்படி பலமுள்ளவர்களும் கொடியவர்களும் தொலைவிலிருந்து வந்தவர்களுமாகிய ராஜாக்களை தோற்கடித்தார் மற்றும் கொடியவர்களான இந்த ராஜாக்களிடமிருந்து லோத்துவை தப்புவித்து அவன் மீது அதிகமான கனிவைக் காட்டினார் என்பதை விவரிக்கிறது. இந்த கதையானது மோசேயைப் பின்பற்றிச் சென்ற இஸ்ரவேலர்களிடம் தெளிவாகப் பேசியது. இஸ்ரவேலர்கள் லோத்துவின் சந்ததியான மோவாபியர்கள் மற்றும் அம்மோனியர்களின் தேசத்தின் வழியாகக் கடந்து சென்ற போது, மோவாபியர்கள் மற்றும் அம்மோனியர்களை ஒடுக்கின கொடிய ராஜாக்களாகிய எமோரிய ராஜாவாகிய சீகோனையும், பாசானின் ராஜாவாகிய ஓகையும், இஸ்ரவேல் சேனை தோற்கடித்தது. மோவாபியர்கள் மற்றும் அம்மோனியர்களை இவ்வாறு மீட்டதன் வாயிலாக ஆபிரகாம் அவர்களுக்கு ஏற்படுத்தின மாதிரியை இஸ்ரவேலர்கள் பின்பற்றினார்கள்.

ஆகவே, ஆபிரகாமுடைய வாழ்க்கையின் இந்த கட்டத்தின் ஒவ்வொரு அத்தியாயத்திலும், ஆபிரகாம் இஸ்ரவேலுக்கு தங்கள் காலங்களில் பின்பற்ற வேண்டிய ஒரு முன்மாதிரியாக இருந்தார்.

## தேவனுடனான உடன்படிக்கை

இப்பொழுது ஆபிரகாமினுடைய வாழ்க்கையின் மூன்றாவது மிகப்பெரிய படியாகிய, 15:1–17:27 இல் சொல்லப்பட்டுள்ளதான, தேவன் ஆபிரகாமுடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு நாம் வந்துவிட்டோம். பொதுவாக, இந்தப்

படியானது முற்பிதாவுடன் தேவன் செய்துகொண்ட உடன்படிக்கை எவ்வாறு பல வழிகளில் தேவனுடன் இஸ்ரவேலர்கள் வைத்திருந்த உடன்படிக்கை உறவின் குணாதிசயங்களை வெளிப்படுத்துகிறது என்பதின் மீது கவனம் செலுத்துகிறது. இந்த அதிகாரங்கள் மூன்று முக்கிய பாகங்களாகப் பிரிகின்றன.

முதல் தொடர்ச்சியாக இணைக்கப்பட்ட பாகமானது குறிப்பாக 15:1–21 இல் ஆபிரகாமிடத்தில் தேவன் செய்துகொண்ட உடன்படிக்கையின் வாக்குத்தத்தத்தின் மீது கவனம் செலுத்துகிறது. இந்த அதிகாரம் தேவன் ஆபிரகாமுடன் உடன்படிக்கைக்குள் நுழைந்ததற்கான காலத்தைக் குறித்து நன்கு அறியப்படுகின்ற கணக்காகும். தேவன் ஆபிரகாமிற்கு சந்ததியையும், தேசத்தையும் தருவதாக வாக்குத்தத்தம் பண்ணினார். குறிப்பாக, ஆபிரகாமினுடைய சந்ததி எண்ணிமுடியாத திரளாயிருப்பார்கள் என்றும், அந்நிய தேசத்தில் ஒரு குறிப்பிட்ட கால பாடுகளுக்குப் பின் ஆபிரகாமினுடைய சந்ததி வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு திரும்ப அழைத்துக்கொண்டு வரப்படுவார்கள் என்றும் தேவன் ஆபிரகாமிற்கு வாக்குத்தத்தம் பண்ணினார். இந்தப் பகுதியானது தேவன் மோசேயின் மூலமாக இஸ்ரவேலர்களுடன் இதே போன்ற உடன்படிக்கையை ஏற்படுத்தினார் என்பதை நினைவூட்டும் விதமாக வடிவமைக்கப்பட்டு இருக்கிறது. இதற்கு அதிகமாக, ஆபிரகாமிற்கு தேவன் செய்த வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதல்களை அவர்களே அனுபவித்துக்கொண்டிருந்தார்கள் என்பதை இது காட்டுகிறது. இந்த இஸ்ரவேலர்கள் தேவன் ஆபிரகாமிற்கு வாக்குத்தத்தம் பண்ணின சந்ததியர், மற்றும் அவர்கள் முற்பிதாவிற்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணின தேசத்திற்கு அவர்கள் திரும்பிக் கொண்டிருந்தார்கள். இந்த உண்மைகள் மீதான சந்தேகமானது தேவன் ஆபிரகாமுடன் ஏற்படுத்திக் கொண்டதும் மற்றும் மோசேயுடன் மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டதுமான கிருபையான உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களை சந்தேகிப்பதாக இருக்கிறது.

தொடர்ச்சியாக இணைக்கப்பட்ட பாகங்களின் இரண்டாம் பாகம், ஆபிரகாமுடனான தேவனுடைய உடன்படிக்கையின் மீது செலுத்துகிற கவனமானது 16:1–16 இல் சொல்லப்பட்டுள்ள ஆகாருடன் முற்பிதாவின் தோல்வியாகும். இந்த சோகமான கதை எப்படி ஆபிரகாமும் சாராளும், சாராளினுடைய எகிப்திய அடிமைப்பெண்ணாகிய ஆகார் மூலமாக ஒரு பிள்ளை வேண்டுமென எதிர்பார்த்து, தேவனுடைய உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களை விட்டுத் திரும்பினார்கள் என்பதை நினைவூட்டுகிறது. ஆபிரகாமும் சாராளும் தேவனுடைய உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களை விசுவாசிப்பதில் தோற்றுப்போனார்கள்; ஆனால், தேவன் ஆபிரகாமினுடைய உண்மையான வித்தாக பிள்ளையாண்டானாகிய இஸ்மவேலை ஏற்றுக் கொள்ளாததின் மூலமாக அவர்களுடைய மாற்றுத் திட்டத்தை நிராகரித்தார். மோசேயினுடைய மூல பார்வையாளர்கள் மீண்டும் மீண்டுமாக தேவனுடைய உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களை விட்டுத் திரும்பினார்கள் மற்றும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எகிப்தின் சுகபோகங்களை விரும்பினார்கள். மேலும் ஆபிரகாமின் வாழ்க்கையினுடைய இந்தக் கதையானது தேவன் ஆபிரகாமினுடைய திட்டங்களை நிராகரித்ததுபோல, தேவனுடைய திட்டத்திற்கு மாறான அவர்களுடைய திட்டங்களையும் நிராகரிப்பார் என்பதை அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தது.

ஆபிரகாமுடனான தேவ உடன்படிக்கையின் மீது தொடர்ச்சியாக இணைக்கப்பட்டுள்ள பாகங்களின் மூன்றாம் பாகம் கவனம் செலுத்தும் காரியம் என்னவென்றால் 17:1–27 இல் சொல்லப்பட்டுள்ளதான ஆபிரகாமினுடைய உடன்படிக்கையின் அவசியங்களின் கணக்கு ஆகும். இந்தப் பகுதியில், தேவனுடைய திட்டத்தைப் பின்பற்றுவதற்கு முற்பிதா தவறியதால் தேவன் அவரை எதிர்த்தார். உடன்படிக்கை அடையாளமாக விருத்தசேதனம் செய்வதை துவங்கியதன் மூலம் கர்த்தர் உடன்படிக்கை தேவப்பற்றின் அவசியத்தை மீண்டும் உறுதிப்படுத்தினார். இது ஆபிரகாம் மற்றும் அவனுடைய குமாரர்களிடத்தில் செயல்முறைப்படுத்தப்பட வேண்டியிருந்தது. இந்த அடையாளத்தின் மூலமாக, ஆபிரகாமினுடைய உடன்படிக்கை உறவானது, தேவப்பற்றின் பொறுப்புகளுக்கு உட்பட்டது என்றும், அந்த தேவப்பற்றானது சிறந்த ஆசீர்வாதங்களுக்கு நேராக வழிநடத்தும் என்றும் தேவன் ஆபிரகாமிற்கு நினைப்பூட்டினார். ஆபிரகாமினுடைய உடன்படிக்கையின் இந்தக் கூற்றை எண்ணிப்பார்த்தவராக, மோசே இஸ்ரவேலர்களை, அவர்கள் விசுவாசமுள்ளவர்களாய் நிலைத்திருக்கத் தவறியமைக்காக எதிர்த்தார், மற்றும் உடன்படிக்கை தேவப்பற்றின் தேவை பற்றி இஸ்ரவேலர்களிடம் மீண்டும் உறுதிப்படுத்தினார். இஸ்ரவேலர்கள் அவர்களுடைய உடன்படிக்கை தேவனிடம் விசுவாசமுள்ளவர்களாய் இருப்பதன் மூலம் மட்டுமே அவருடைய சிறந்த ஆசீர்வாதங்களுக்காக அவர்கள் சரியாக நம்பிக்கை கொள்ள முடியும்.

ஆகவே, ஆபிரகாமின் வாழ்க்கையின் மையப்பகுதியான, தேவனுடன் அவனுடைய உடன்படிக்கையானது, இஸ்ரவேலர்களுக்கான தேவனுடைய அற்புதமான வாக்குத்தத்தங்களின் கிருபையின் மீது கவனத்தை ஈர்க்கிறது. ஆனால், இது அவர்கள் அவர்களுடைய உடன்படிக்கை தேவனை தேவப்பற்றுடன் சேவிக்க வேண்டிய கடமையுடையவர்கள் என்பதை அவருடைய பார்வையாளர்கள் வலுக்கட்டாயமாக நினைவுகூரும்படிச் செய்தது.

## மற்றவர்களுடனான பிற்கால தொடர்புகள்

நாம் இப்பொழுது ஆபிரகாமின் வாழ்க்கையின் நான்காம் படிக்கு வந்திருக்கிறோம்: பின்னாட்களில் மற்றவர்களுடன் கொண்டிருந்த உறவு 18:1–21:34 இல் காணப்படுகிறது. இந்த அதிகாரங்களில் மோசேயின் காலகட்டத்தில் வாழ்ந்த ஜனங்களுடன் தொடர்புடைய பலவிதமான ஜனங்களை ஆபிரகாம் எதிர்கொண்டார். ஆபிரகாம், சோதோம் கொமோராவைச் சார்ந்தவர்களான



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கானானிய குடிகள், லோத்து, அபிமெலேக்கு மற்றும் இஸ்மவேல் ஆகியோருடன் தொடர்புகொண்டிருந்தார். பொதுவாக, இந்த ஜனங்களுடன் ஆபிரகாம் கொண்டிருந்த தொடர்பானது இஸ்ரவேலர்கள் அவர்கள் வாழ்ந்த நாட்களில் கானானியர்கள், மோவாபியர்கள், அம்மோனியர்கள், பெலிஸ்தியர்கள் மற்றும் இஸ்மவேலர்களுடன் எப்படித் தொடர்பு வைத்திருக்க வேண்டும் என்பதைக் கற்பிக்கிறது.

முற்பிதாவின் வாழ்க்கையில் வருகின்ற இந்தப் பகுதியின் முதல் கதையானது 18:1–21:34 இல் சொல்லப்பட்டுள்ள சோதோம் கொமோரா சம்பவம் ஆகும். நன்கு அறியப்பட்ட இந்த கதையானது தீய கானானிய பட்டணங்களுக்கு எதிராக தெய்வீக நியாயத்தீர்ப்பின் அச்சுறுத்தல் பற்றி சொல்கிறது. இது ஆபிரகாம் இந்த பட்டணங்களில் வாழ்கின்ற நீதிமான்களுக்காக கரிசனை கொள்வதையும், இந்த பட்டணங்களின் அழிவையும், லோத்து தப்புவிக்கப்படுவதையும் பற்றிச் சொல்கிறது. இந்த சம்பவங்கள், மோசேயினுடைய மூல பார்வையாளர்கள் எதிர்கொள்கிற சூழ்நிலைகளிடம் நேரடியாக பேசியது. கானானியர்களுக்கு விரோதமாக தேவனுடைய கோபம், கானானிய நீதிமான்கள் மீது இஸ்ரவேலர்கள் கொள்ள வேண்டிய கரிசனை (எரிகோவில் அவர்கள் எதிர்க்க வேண்டியிருந்த ராகாப்), கானானிய பட்டணங்களுக்கு எதிராக நிச்சயமாக வரவிருந்த அழிவுகள், லோத்துவினுடைய சந்ததிகளான மோவாபியர்கள் மற்றும் அம்மோனியர்களிடம் அவர்கள் கொண்டிருந்த உறவு போன்றவைகளே அந்த சூழ்நிலைகளாகும்.

மற்றவர்களுடன் ஆபிரகாமினுடைய பிற்கால தொடர்பின் இரண்டாவது பகுதியானது 20:1–18 இல் காணப்படுகிறது. இந்த கதையில் ஆபிரகாம் பெலிஸ்தியனாகிய அபிமெலேக்கு போன்ற அந்த தேசத்து குடிகளுக்காக ஒருமுறைகூட பரிந்து பேசுகிறார். அபிமெலேக்கு சாராள் ஆபிரகாமின் மனைவி என்று தெரியாமல், அவளை எடுத்துக்கொண்டு ஆபிரகாமை அச்சுறுத்துவதை நாம் நினைவு கூறலாம். எனவே, தேவன் அபிமெலேக்குக்கு எதிராக நியாயத்தீர்ப்பை கொண்டுவருகிறார், அபிமெலேக்கு அவனுடைய செய்கையிலிருந்து மனந்திரும்பி தன்னை நீதிமானாக மெய்ப்பிக்கிறான். அவனுடைய மனந்திரும்புதலின் முடிவாக, ஆபிரகாம் அபிமெலேக்குக்காக பரிந்துபேசுகிறார், ஆபிரகாமும், அபிமெலேக்கும் ஒருவருக்கொருவர் நீடித்த அமைதி மற்றும் நட்பை அனுபவிக்கிறார்கள்.

இந்தக் கதையானது, மோசேயினுடைய காலத்தில் வாழ்ந்த இஸ்ரவேலர்கள் அவர்கள் காலத்தில் வாழ்ந்த பெலிஸ்தியர்களிடம் எப்படிப்பட்ட அணுகுமுறை கொண்டிருக்க வேண்டும் என்று பேசுகிறது. பல்வேறு வழிகளில், பெலிஸ்தியர்கள் இஸ்ரவேலர்களை அச்சுறுத்தினார்கள். ஆனால், தேவனுடைய நியாயத்தீர்ப்பு பெலிஸ்தியர்களை மனந்திரும்பச் செய்தது; இஸ்ரவேலர்கள் பெலிஸ்தியர்களுக்காக பரிந்துபேச



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வேண்டியிருந்தது, மற்றும் அவர்களுடன் நீடித்த அமைதியை அனுபவிக்க வேண்டும்.

இந்தப் பகுதியின் மூன்றாவது கதையானது 21:1–21 இல் காணப்படுகிறது, இது ஈசாக்கிற்கும் இஸ்மவேலுக்கும் இடையே காணப்பட்ட கடினமான உறவின் மீது கவனம் செலுத்துகிறது. ஈசாக்கு, இஸ்மவேல் இருவரும் ஆபிரகாமின் குமாரர்கள். ஆனால் இவர்கள் இருவருக்கிடையே பிரச்சினை ஏற்பட்டபோது, தேவன் இஸ்மவேலை குடும்பத்திலிருந்து பிரித்துவிடும்படி ஆபிரகாமிற்கு அறிவுறுத்தினார். இருந்தபோதிலும் தேவன் இஸ்மவேலை ஆசீர்வதித்தார்; ஆனால் ஈசாக்கு மட்டுமே ஆபிரகாமினுடைய சுதந்திரவாளி என்பதை தெளிவாக்கினார். மோசே தன்னுடைய மூல பார்வையாளர்களான இஸ்ரவேலர்களுக்கு இந்த சம்பவங்களை அறிவித்து, இஸ்மவேலர்களுடனான அவர்களுடைய உறவுமுறையின் பண்புகளை புரிந்துகொள்வதற்கு உதவினார். இஸ்ரவேலர்களுக்கும், இஸ்மவேலர்களுக்கும் இடையே பிரச்சினை உருவானபோது, தேவன் அவர்களுக்கிடையே நியமித்ததான பிரிவை அவர்கள் நினைவுகூற வேண்டியிருந்தது. தேவன் இஸ்மவேலர்களை பல வழிகளில் ஆசீர்வதித்தபோதிலும், இஸ்ரவேலர்கள் மட்டுமே ஆபிரகாமினுடைய உண்மையான சுதந்திரவாளிகள்.

மற்றவர்களுடனான ஆபிரகாமினுடைய பிற்கால தொடர்பின் தொடர்ச்சியாக இணைக்கப்பட்ட பாகங்களின் நான்காம் பாகம் யாதெனில் 21:22–34 அபிமெலேக்குடன் ஆபிரகாம் செய்துகொண்ட ஒப்பந்தம் பற்றிய கதை. இந்த கதையானது, ஆபிரகாம் மீது தேவனுடைய தயவு இருப்பதை பெலிஸ்தியனாகிய அபிமெலேக்கு ஒப்புக்கொண்டதையும், ஆபிரகாம் எப்படி அபிமெலேக்கு மற்றும் அவனுடைய சந்ததியாருடன் அமைதலுள்ள ஜீவனம் பண்ண சம்மதித்ததையும் அறிக்கையிடுகிறது. ஆபிரகாமினுடைய ஆடுகளுக்குத் தண்ணீர் தேவைப்பட்டபோது எழுந்த வாக்குவாதத்தையும், அபிமெலேக்கும் ஆபிரகாமும் எவ்வாறு பரஸ்பர மரியாதை மற்றும் கனத்துடன் பெயர்செபாவில் வைத்து முறையான ஒப்பந்தம் செய்துகொண்டார்கள் என்பதையும் பற்றிச் சொல்கிறது.

மோசே மற்றும் இஸ்ரவேலர்கள் வாழ்ந்த நாட்களில் பலம்வாய்ந்த அச்சுறுத்தலாக பெலிஸ்தியர்கள் காணப்பட்டார்கள் என்பதை அபிமெலேக்கும் அவனுடைய சேனாபதியும் நினைப்பூட்டினார்கள். தேவனுடைய ஆசீர்வாதம் இஸ்ரவேலர்கள் மேல் இருப்பதை பெலிஸ்தியர்கள் ஒப்புக்கொள்வார்களானால், ஆபிரகாமைப் போல இஸ்ரவேலர்களும் அவர்களுடன் சமாதானமுடன் வாழ வேண்டும் என்று, இங்கே, மோசே அவரைப் பின்பற்றுகிறவர்களுக்குக் கற்பிக்கிறார். பெயெர்செபா என்று அழைக்கப்படும் துரவு மோசேயினுடைய நாட்களிலும் காணப்பட்டது, இது இங்கு செய்யப்பட்ட ஒப்பந்தத்தையும், மற்றும் பெலிஸ்தியர்களுடன் பரஸ்பர கனத்தையும்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அமைதியையும் எவ்வாறு தொடர வேண்டும் என்பதையும் இஸ்ரவேலர்களுக்கு நினைப்பூட்டிக் கொண்டிருந்தது.

ஆகவே, ஆபிரகாமின் பிற்கால தொடர்புகளின் கதைகள் மோசேயும் இஸ்ரவேலர்களும் எதிர்கொண்ட நபர்களுடன் ஒத்த பல கதாபாத்திரங்களை உள்ளடக்கியிருப்பதைக் காண்கிறோம். ஆபிரகாமினுடைய செய்கைகளைக் கண்டு இஸ்ரவேலர்கள் அநேக பாடங்களை அவர்களுடைய நாட்களில் கற்றுக்கொள்ள முடிந்தது.

## சந்ததி மற்றும் மரணம்

ஆதியாகமம் 22:1–25:18 இல் சொல்லப்பட்டுள்ள ஆபிரகாமினுடைய வாழ்க்கை, அவருடைய சந்ததி மற்றும் மரணம் குறித்ததான மோசேயினுடைய பதிவின் இறுதிக்கட்டத்திற்கு வந்திருக்கிறோம். இந்த தொடர்ச்சியாக இணைக்கப்பட்டுள்ள பாகங்களானது ஆபிரகாமின் மரபில் கவனம் செலுத்துகின்றன, இது தேவனுடனான அவரது உடன்படிக்கை உறவை வருங்கால சந்ததியினருக்கு நீட்டித்தது. பொதுவாக, மோசேயிடமிருந்து இந்த கதைகளை முதலாவது பெற்றுக்கொண்ட இஸ்ரவேலர்கள் ஆபிரகாமினுடைய சுதந்திரவாளிகளாக அவர்களுடைய நிலையைப் பற்றியும், மற்றும் அவர்களுடைய சந்ததிகளைக் குறித்து அவர்கள் கொள்ள வேண்டிய நம்பிக்கைகள் பற்றியும் அதிகமாக அறிந்திருப்பார்கள்.

ஆபிரகாமினுடைய வாழ்க்கையைப் பற்றிய இந்தப் பகுதியின் தொடர்ச்சியாக இணைக்கப்பட்ட பாகங்களின் இந்த முதல் பாகமானது எல்லோராலும் நன்கு அறியப்பட்டதான 22:1–24 இல் சொல்லப்பட்டுள்ள கதையான ஆபிரகாமின் சோதனை ஆகும். இந்த சோதனையானது ஆபிரகாம் அவனது சொந்த குமாரனை நேசிப்பதை விட அதிகமாக தேவனை நேசிக்கிறார் என்பதை தீர்மானிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆபிரகாம் அவனது சொந்த குமாரனை பலி செலுத்தும்படி, தேவன் ஒரு கடினமான சோதனையை முன்னெடுக்கிறார். ஆபிரகாம் இணங்கினார், மற்றும் ஆபிரகாமின் இணக்கத்தின் விளைவாக ஈசாக்கினுடைய வருங்காலம் மிகவும் பிரகாசமானதாக இருக்கும் என்று தேவன் உறுதியளித்தார்.

இந்த கதையின் தாக்கங்கள் எண்ணற்றதாக இருந்தபோதிலும் மோசேயைப் பின்பற்றின இஸ்ரவேலர்களுக்கு, இந்த பகுதியின் மிக முக்கியமான அம்சம் என்னவென்றால், தேவன் இஸ்ரவேல் தேசத்தை, அவர்கள் தேவன்மீது கொண்டிருக்கிற தேவபற்றின் ஆழத்தைக் காணும்படியாகச் சோதிக்கிறார் என்பதை அவர்களுக்கு நினைவூட்டியது. மோசேயினுடைய நாட்களில், இஸ்ரவேல் தேசத்தை சோதிப்பதற்காக அநேக சோதனைகளை முன்னெடுக்கிறார். ஆபிரகாமினுடைய சோதனையின் மீது அவனுடைய இணக்கம், இஸ்ரவேல் ஜனங்கள் அவர்களுடைய சோதனைகள் எப்படிப்பட்ட கடினமானதாக இருந்தாலும் அதற்கு இணங்கும்படி அவர்களுக்கு நினைப்பூட்டியது. ஆபிரகாமினுடைய சந்ததியாக ஈசாக்கினுடைய சிறந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வருங்காலத்தைக் குறித்ததான உறுதியானது, இஸ்ரவேலர்கள் அவர்களுக்கு கொடுக்கப்படும் சோதனைகளில் வெற்றியடைந்தால் சிறந்த வருங்காலத்தை அடைவார்கள் என்பதை நினைவுபடுத்தியது.

ஆபிரகாமினுடைய வாழ்க்கையைக் குறித்ததான கடைசி கட்டத்தின் தொடர்ச்சியாக இணைக்கப்பட்ட பாகங்களின் இரண்டாம் பாகமானது 23:1-20 இல் சொல்லப்பட்டுள்ள கதையான முற்பிதா கல்லறைப் பூமியை .விலைகிரையத்துக்கு வாங்கும் நிகழ்வாகும். ஆபிரகாம் தன்னுடைய மனைவியாகிய சாராள் மரித்தபோது குடும்ப கல்லறை பூமியை எப்ரோனில் எப்படி வாங்கினார் என்பதை இந்தக் கதை விவரிக்கிறது. முற்பிதா இந்த சொத்தை ஒரு பரிசாக ஏற்றுக்கொள்ளமல் அதனை விலைகிரையம் கொடுத்து வாங்கியதை இந்தக்கதை முக்கியப்படுத்துகிறது. இந்த சொத்துக் கிரையம் அவனுடைய குடும்பத்தாருக்கு கானான் தேசத்தை அவர்களுடைய சொந்த தேசமாக முறைப்படி உரிமை கொண்டாடுவதை நிலைநாட்டியது.

மோசேயை பின்பற்றின இஸ்ரவேலர்கள், அவர்களுடைய சொந்த வாழ்க்கைக்காக விலைக்கிரையமாக கொள்ளப்பட்ட இந்த கல்லறை பூமியின் தாக்கம் மற்றும் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டார்கள். இது அவர்களின் முன்னோர்களின் கல்லறை பூமி. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு அனைவரும் அங்கே அடக்கம் பண்ணப்பட்டார்கள். அந்த தேசத்தைப் பிடிப்பதற்கு முன்பதாகவே, இது அவர்களின் முறைப்படியான சொத்தாக விளங்கியதை அவர்கள் புரிந்துகொண்டார்கள். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு அனைவரும் அவர்களுடைய வாழ்நாட்களின் அநேகத்தை எப்ரோனிலும் அதனைச் சுற்றிலும் செலவழித்தார்கள். இஸ்ரவேலர்கள் அவர்களுடைய முன்னோர்களின் சொந்த தேசமாகிய எப்ரோனுடன் அதிகமாக ஈடுபாடு கொண்டிருந்தார்கள், முற்பிதாவாகிய யாக்கோபின் எலும்புகளைக் கூட எடுத்துச் சென்று எப்ரோனில் அடக்கம்செய்தார்கள். ஆபிரகாமினால் விலைக்கிரையமாகக் கொள்ளப்பட்ட இந்த கல்லறைப் பூமியைப் பற்றின கதையானது ஆபிரகாமினுடைய சந்ததியினருக்கு சரியான இடம் கானானியர்களின் தேசமேயன்றி வேறில்லை என்பதை மெய்ப்பிக்கிறது.

ஆபிரகாமினுடைய சந்ததி மற்றும் மரணம் குறித்ததான தொடர்ச்சியாக இணைக்கப்பட்ட பாகங்களின் மூன்றாவது பாகமானது 24:1-67 இல் சொல்லப்பட்டுள்ள கதையான ஆபிரகாமினுடைய மருமகளாகிய, அவருடைய விஷேசித்த குமாரனாகிய ஈசாக்குக்கு மனைவியான, ரெபேக்காள் பற்றிய மனதைத் தொடுகிற கதையாகும். இந்தக் கதையில் ஈசாக்கு கானானியர்களுடைய சீர்கேடுகளைத் தவிர்ப்பதை உறுதிசெய்யும் விதமாக, ஈசாக்கு கானானிய பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளக்கூடாது என்பதை வலியுறுத்தினார். ஆனால் ஈசாக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்திலே குடியிருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தினார், எனவே வேலைக்காரனை அனுப்பி ஈசாக்கிற்கு ஒரு மனைவியைக் கொண்டுவரும்படி அனுப்புகிறார். இப்படியாக ஈசாக்கிற்கு ஒரு மனைவியைத்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேடுவதில், ஆபிரகாம் ஈசாக்கிற்கும் அவனுடைய சந்ததியினர்க்கும் சிறந்த ஆசீர்வாதமுள்ள வருங்காலத்தை தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை உறுதி செய்தார்.

ஆபிரகாமுடன் அவர்கள் முன்னோர்களின் தொடர்பு முறையுடைய ஈசாக்கு, கானானை தன் சொந்த தேசமாகக் கருதி அங்கிருந்தபோதிலும் கூட, கானானிய சீர்கேடுகளிலிருந்து தன்னைப் பரிசுத்தமாகக் காத்துக்கொண்டார் என்பதை மோசேயைப் பின்பற்றின இஸ்ரவேலர்கள் இந்த கதையிலிருந்து கற்றுக்கொண்டிருப்பார்கள். ஈசாக்கினுடைய சிறந்த ஆசீர்வாதமுள்ள வருங்காலம் என்பது அவர்களுடைய வருங்காலமே. எனவே, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் எவ்வளவு நாட்கள் குடியிருந்து வந்தாலும் கானானியர்களின் சீர்கேடுகளுக்கு எதிர்த்து நின்றார்கள்.

ஆபிரகாமினுடைய வாழ்க்கையைக் குறித்ததான தொடர்ச்சியாக இணைக்கப்பட்ட பாகங்களின் கடைசி பாகமானது 25:1–18 இல் சொல்லப்பட்டுள்ள ஆபிரகாமின் மரணம் மற்றும் சுதந்திரவாளியைக் குறித்ததானக் கதையாகும். பல சுருக்கமான அறிக்கைகளின் இந்த தொகுப்பானது சாராள் அல்லாத பிற மனைவிகளினால் ஆபிரகாமிற்கு உண்டான குமாரர்களை இது பட்டியலிடுகிறது. பின்னர், இது ஈசாக்கு முறையான சுதந்திரவாளியாக ஆபிரகாமின் இறுதி ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும் வேளையான முற்பிதாவின் மரணத்தை நோக்கித் திரும்புகிறது. இறுதியாக, இது மாறுபட்ட பகுதியாக, இஸ்மவேலின் சந்ததியைக் குறித்த சுருக்கமான பட்டியலுடன் முடிகிறது.

ஆபிரகாமினுடைய வாழ்க்கையின் இந்த இறுதியானது அநேக தாக்கத்தை அதன் மூல பார்வையாளர்களுக்குக் கொண்டுவந்தது. இது ஆபிரகாமினுடைய மற்ற குமாரர்களை இஸ்ரவேலர்களிடமிருந்து வேறுபடுத்திக்காட்டும் விதமாகப் பட்டியலிட்டுள்ளது. மோசேயைப் பின்பற்றும் இஸ்ரவேலர்கள் தான் ஆபிரகாமுடைய வாக்குத்தத்தங்களின் உண்மையான சுதந்திரவாளிகள் என்பதை ஈசாக்கிற்கு ஆபிரகாம் வழங்கிய இறுதி ஆசீர்வாதம் உறுதிப்படுத்துகிறது என்று இது முன்னிலைப்படுத்திக்காட்டுகிறது. மேலும் இஸ்மவேலர்களின் சந்ததியினர், ஆபிரகாமினுடைய தலைமுறைக்கு உரிமை கோரும் எதையும் அகற்ற வேண்டும் என்று இது குறிப்பிடுகிறது. ஆபிரகாமினுடைய வாழ்க்கையைக் குறித்ததான கணக்கை இப்படியாக முடிக்கும் விதத்தில், மோசே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி தான் நடத்தி வந்த இஸ்ரவேலர்களாகிய ஆபிரகாமினுடைய உண்மையான சந்ததியின் அடையாளம், உரிமைகள் மற்றும் கடமைகளை முறைப்படுத்தினார்.

ஆகவே, தான் நடத்தி வந்த இஸ்ரவேலர்கள் ஏன் மற்றும் எப்படி எகிப்தை விட்டுவிட்டு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கிச் செல்ல வேண்டும் என்று கற்றுக்கொடுக்கும் விதமாக மோசே தன்னுடைய கதைகளில் ஆபிரகாமினுடைய வாழ்க்கையைக் குறித்து எழுதினார். இந்த இலக்கை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அடைய, முற்பிதாவின் வாழ்க்கையின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் மோசே பல்வேறு வழிகளில் வலியுறுத்தினார், அதாவது அவர்கள் முற்பிதாவுக்கு வழங்கப்பட்ட கிருபையின் வாரிசுகளாக எப்படி இருக்க முடியும் என்றும், முற்பிதா பொறுப்பாக இருந்தது போல அவர்களும் எப்படி தேவனுக்கு விசுவாசமாக இருக்க முடியும் என்றும், அவர்கள் எவ்வாறு ஆபிரகாமைப் போலவே தேவனிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள் என்றும், அவர்கள் ஒரு நாள் பூமியின் எல்லா தேசங்களையும் எவ்வாறு ஆசீர்வதிப்பார்கள் என்றும் வலியுறுத்தினார். ஆபிரகாமினுடைய வாழ்க்கையைக் குறித்த மோசேயின் கணக்கானது அளவிடமுடியாத தாக்கங்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி மோசேயைப் பின்பற்றின இஸ்ரவேலர்களுக்காகக் கொண்டிருந்தது.

# முடிவுரை

இந்தப் பாடத்தில் ஆதியாகமம் புத்தகத்தில் ஆபிரகாமின் வாழ்க்கை குறித்த கணக்கின் உண்மையான அர்த்தம் என்ன என்பதைப் பார்த்தோம். இந்த உண்மையான அர்த்தத்தை ஆராய இரண்டு முக்கிய திசைகளைப் பார்த்தோம்: ஒருபுறம் மோசே இந்த கதைகளுக்கும் அவர் எழுதிய இஸ்ரவேலரின் அனுபவங்களுக்கும் இடையில் உள்ள தொடர்புகளை ஆராய்ந்தோம். மறுபுறம், இஸ்ரவேலர்கள் எகிப்தை விட்டு வெளியேறி கானானை சுதந்தரிப்பதை நோக்கி நகர்ந்த போது தனது மூல பார்வையாளர்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் தனது கதைகளை மோசே எவ்வாறு வடிவமைத்தார் என்பதைப் பார்த்தோம்.

ஆபிரகாமுக்கும் மூல இஸ்ரவேல் வாசகர்களுக்கும் இடையில் மோசே ஏற்படுத்திய தொடர்புகள் பற்றியும், அவரது கதை அவரது பார்வையாளர்களுக்கு எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தது பற்றியும் மேலும் அறியும்போது, ஆபிரகாமுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு அத்தியாயமும் இஸ்ரவேலருக்கு எவ்வாறு வழிகாட்டுதலாக இருந்தது என்பதைப் பார்ப்போம். இந்தக் கதைகள் இன்றைய நம் வாழ்க்கைக்கு எவ்வாறு பொருந்த வேண்டும் என்பதையும் நாம் நன்கு அறிந்து கொள்வோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.